


# மருதம்

## தைப்பொங்கல் சிறப்பு வெளியீடு

2010

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**OPEN UNIVERSITY OF SRI LANKA**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடக அனுசரணை

# வெற்றி
VETTRI

# VIRAKESARI
# வீரகேசரி

**தரமான வழியில் தெளிவான தகவல்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-3 FEB 2010

# சமர்ப்பணம்

சோற்றுக்காக சேற்றில் கால் புதைத்து
ஏர் பூட்டி வியர்வை சிந்தும் உழவருக்கு
எம் மனம் குளிர வாழத்துகிறோம்.
எம் துயர் மறந்து பிறர் வாழ்விற்காய்
இரத்தம் சிந்தும் உழவா - கதிரவன்
ஆசிகளோடு தைப்பொங்கல் நாளன்று
எம் மருதம் மலர் உமக்கு சமர்ப்பணம்...



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5316 (P) Archive

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ்த்தாய் வாழ்த்து


வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே!
வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்க தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ் மொழியே!
வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வளர்மொழி வாழியவே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வெண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதைவணக்கஞ்செய்தல் வேண்டும்

-பாரதியார்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நினைவு கூறுகின்றோம்

தங்கத் தமிழர்
பாரம்பரிய பண்பாடுகளில்
ஒன்றாம் தைத்திருநாள்.
சூரிய பகவான் துணை
கொண்டு உழவர் பெருமக்களின்
உன்னத நாளாம் இன்று.
இத்திருநாளில்
தன் உழைப்பை, தன் துயர்
மறந்து பிறர்க்காய்
உதிரம் சிந்தும்
உயர் மனிதத்திற்கு
நன்றிகள் பல கோடி
இயம்புவதில் அளவிலா ஆனந்தம் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Chief Guest

**Professor. Upali Vidanapathirana**

*(Vice Chancellor, of the Open University of Sri Lanka.)*

## Special Guests

**Dr. Ms. Thusitha Jayasooriya**

*(Dean, Faculty of natural Science)*

**Dr. Asoka Silva,**

*(Dean Faculty of Humanities & Social Science)*

**Prof. W. A. Wimalaweera**

*(Dean, Faculty of Engineering Technology*

**Prof. G. D. Lekamge**

*(Dean, Faculty of Education)*

## Guest of Honour

**Mr. M. Senthilnathan** *(MBA) (UK),*

*(Business Development Manager,)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THAI PONGAL COMMITEE MEMBERS - 2010




**Standing :** Ms. J. P. Jane Carolina, Ms. T. Keerthika, Ms. K. Kobiga (Programme Co-Ordinator), , Ms. B. Srividya, Ms. J. Dharshika, Mr. M. Jegathees, Mr. V. Panchapikeshan (Editor), Mr. M. Z. M. Zafrin, Mr. S. Piratheepan, Mr. D. Sridharan, Mr. J. Viveganandan (Editor), Mr. P. Loganathan, Ms. T. Nithaginy (Editor), Ms. T. Bakeeratha, Ms. T. Abirami, Ms. T. Prasanya

**Seated :** Ms. R. Renuka (Vice President), Mr. B. Elankovan (Treasurer), Mr. P. Nithiyananthan (President), Mr. V. Dhanaraj (Secretary) Ms. A. Lalitha (Vice Secretary),

**Absent :** Mr. V.Frank, Ms. S.Tharmika, Ms.S.Sulakshi, Mr.S.Kobithan (Programme Co-Ordinator)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**RAMAKRISHNA MISSION**
*(Ceylon Branch)*
40, Ramakrishna Road, Colombo 6.
Email - ~~rkmcey@eureka.lk~~ & rkmcey@gmail.com

*Phone - 2588253*
*5013805*
*Fax - 2361438*

# ஆசிச்செய்தி....

தைப்பொங்கல் தினத்தன்று திறந்த பல்கலைக்கழக தமிழ் மாணவர்களாகிய நீங்கள் 'மருதம்' எனும் நூலை வெளியிடுவதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

தைப்பொங்கல் தினம் அனைவருக்கும் மகிழ்வை ஏற்படுத்துகின்றது. குறிப்பாக அன்று உழவர்கள் அதிக மகிழ்ச்சியாக இருப்பர். அவர்களின் கடுமையான உழைப்பு அந்த மகிழ்ச்சிக்குக் காரணமாக அமைகின்றது.

உழவன் வயலை உழுது அதில் விதைகளை விதைத்து பலவிதமான போராட்டங்களுக்கு மத்தியில் அவற்றைப் பயிர்களாக்கி அவற்றிலிருந்து அறுவடை மூலம் நெல்மணிகளைப் பயனாகப் பெறுகின்றான். இந்த நெல்மணிகளில் தன் உழைப்பு மாத்திரமன்றி சூரிய பகவானின் ஒளிக்கும் பெரும் பங்கு உண்டு என உணர்ந்து தைப்பொங்கல் தினத்தன்று அதிகாலை எழுந்து பொங்கல் பொங்கி சூரியபகவானுக்குப் படைத்து தன் குடும்பத்துடனும் உறவினர்களுடனும் பகிர்ந்துண்டு மகிழ்வடைகின்றான்.

உழவன் போல், திறந்த பல்கலைக்கழகம் எனும் வயலில் கல்வி எனும் விதையை விதைத்து உழைப்பு எனும் நீர் ஊற்றி வளர்த்தெடுத்து, நல்லறிவு, பண்பு ஆகிய பயன்களை மாணவர்கள் பெற வேண்டும்.

நீங்கள் கல்வியிலும் பண்பிலும் மகோன்னதமான வளர்ச்சியடைய வேண்டும் என்றும், உங்களுடைய வாழ்க்கை உங்களுக்கும் சமுதாயத்திற்கும் நன்மை அளிக்கக்கூடிய வகையில் அமைய வேண்டும் எனவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

இறைபணியில்

Swami Rajeswarananda

**சுவாமி இராஜேஸ்வரானந்தா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
Colombo Tamil Sangam Society Ltd.

# வாழ்த்துரை !!!

அறிவின் பிரவாகமும், அறிவுசார் பொருளாதாரத்தின் எழுச்சியும் அறிவே செல்வத்தை ஈட்டித்தரும் விந்தையாகவும் வளர்ந்து மேலெழும் நிலையில் பல்கலைக்கழகங்கள், சிறப்பாக மரபுசாரப் பல்கலைக்கழகங்களின் பணிகள் புதிய அறைகூவல்களுக்கு முகம் கொடுத்து எழுச்சி கொள்ளத் தொடங்கியுள்ளன.

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் மேற்குறித்த தளத்திலிருந்து எழுச்சி கொள்ளும் வேளை அங்கே பயிலும் மாணவரின் தனித்துவங்களின் அலங்கரிப்பாக 'மருதம்' இதழ் வெளிவருதல் மகிழ்ச்சிக்குரியது. கல்வியின் பயன்கள் ஆக்க மலர்ச்சியின் வாயிலாக வினைப்பாடு கொள்ளவேண்டியுள்ளன. ஆக்க மலர்ச்சி அல்லது படைப்பாற்றல் என்பது கலை, விஞ்ஞானம், அழகியல், தொழில்நுட்பவியல் என்ற அனைத்துத் துறைகளையும் தழுவிய செயற்பாடாகும். அதன் பெறுபேறுகளும் விளைவுகளும், மானிடத்தின் மலர்ச்சிக்கு உதவுகின்றன. மேலும் தொடர்ந்து உதவ வேண்டியுமுள்ளன. மாணவரின் ஆக்கமலர்ச்சியையும், ஆய்வறிவாளரின் சிந்தனை எழுகோலங்களையும் தாங்கி மருதம் மலர எமது நல்வாழ்த்துக்கள்.

சபா. ஜெயராசா
பேராசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Message from the
# Vice Chancellor

I am pleased to write this message of good wishes to our Tamil speaking friends at the Open University of Sri Lanka when you ceremonially mark the religious festival of Thai Pongal on January 14, 2010.

Thai Pongal is celebrated in this part of the world to invoke blessings of the God and thanking him for giving a good harvest. It marks the completion of one successful cycle of crop and the beginning of another. It has a greater cultural significance for all Sri Lankans who share solidarity with their Tamil brethren. For Tamil people it is greater moment of cultural and spiritual significance which is celebrated over a period of four days.

I am very happy to share my best wishes with you all. I wish that the entire OUSL community will extend their goodwill, and assistance to build this country where we all shall work and live in harmony. I congratulate the organizing committee for making this event colourful.

**Professor Upali Vidanapathirana**
Vice Chancellor



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Thai Pongal Message from DVC

It is a great pleasure to send this message on the occasion of the Thai Pongal festival.

On the Thai Pongal day, the thanks giving day of the Hindus, people worship the Sun God for his gifts of bounty - the good harvest.

I appreciate the effort of the Open University Students in organizing a religious and cultural festival on this important day.

I wish you all Prosperity and a Happy Thai Pongal.

**Dr. Janaka Liyanagama**
Deputy Vice - Chancellor



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### Message from the

# Head Department of Social Studies

I take great pleasure in sending this message to the students of the Open University who celebrate Thai Pongal in 2010. The Thai Pongal is one of the Major Hindu Festival celebrates in the first month of every year. I really appreciate the students of OUSL who are taking enormous interest to organize this even every year.

In spite of immense changes in our life style, the traditions and customs attached to the harvest festival of Thai Pongal has not diminished. The fast changing times notwithstanding, certain things do not change. The spirit is alive and Thai Pongal is still treated as a time to discard the old and welcome the new.

Wishing you all a very Happy Thai Pongal.

**Dr. A.S. Chandrabose**
Head-Department of
Social Studies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### Message from the
# Head / Legal Department

It is with a sense of great pride and joy that I pen my message to the souvenir published by the Tamil Union of the Open University of Sri Lanka to mark the 'Thai Pongal Vizha' to be held on 14th January 2010.

The Open University of Sri Lanka as been providing its services to the nation as a leading provider of open and distance learning in higher education with a multi - ethnic and multi religious student community. Though the prime objective of the institution is to develop the quality of the higher education, it is also important to celebrate cultural events in university level to develop and foster language, religious faith, the culture, values and tradition.

There are many schools of thoughts about culture and traditions of Tamils, as they tend to manifest the civilization of the society. 'Thai Pongal' is a harvest festival equivalent to a thanksgiving event celebrated by Tamils across the world. It is celebrated on January 14th every year to honour the Sun, for a bountiful harvest. The Sun is offered a "Pongal" of rice and milk. It is interesting to note these types of events are not totally alien to the other religious societies in Sri Lanka, especially to the Buddhism. Therefore not only this sort of events will help the students to develop their talents towards music, dance, drama, poetry and other aesthetic fields but also it will help them to identify their cultural similarities as well.

The most important and also the very special feature of these cultural events is the participation of the students from different communities and with different religious backgrounds. I see these religious events as an opportunity to get to know about other cultural values and traditions.

I am aware that the Tamil Union of the Open University of Sri Lanka has been annually holding 'Thai Pongal Vizha'. It is my fervent hope that the activities of the Tamil Union will be carried out successfully in the years to come as well. I congratulate the Tamil Union for arranging this event and I wish the organizers all the best for their future endeavors.

**Dr. Tissa Hemaratne**
Head / Department of Legal Studies.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவரின் உள்ளத்திலிருந்து !!!

கண்டங்கள் பல கடந்தாலும், கருத்தாலும் எழுத்தாலும் எம்முடன் உறவு கொண்டாடும் தமிழ் உள்ளங்களே! தமிழன் என்ற முறையில் நன்றி உணர்வூட்டும் வகையில், தமிழர்களின் கலாசார நிகழ்வுகளில் ஒன்றான இத் **"தைத்திருநாள்"** தமிழனை அறியாத இவ்வுலகிற்கு இவ்வகை விழாக்களின் மூலம் இச்சமுதாயத்திற்கு ஞாபகமூட்டும் வகையில் எமது திறந்த பல்கலைக்கழகத்தில் கொண்டாடப்படுகிறது.

சுடும் சூரியனுக்கும் சுடாத சந்திரனுக்கும் அறிமுகமான ஏர் கலப்பையுடன் சோற்றுக்காய் சேற்றில் களமிறங்கும் உழவர்களால் சூரிய பகவானுக்கு நன்றி நவிலவே இத்திருநாள்.

இவ்வாறான சிறப்பான ஓர் விழாவினைக் கொண்டாடுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தையிட்டும், இவ்வாண்டின் ஆரம்ப விழாவாக அமைந்ததையிட்டும் நான் மகிழ்ச்சியடைகிறேன். அத்துடன் 'மருதம்' நூலை வெளியிட உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எனது நன்றிகளுடன் தைத்திருநாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ப.நித்தியானந்தன்
2ம் வருடம்
குடிசார் எந்திரவியல்பீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளரின் உள்ளத்திலிருந்து !!!

எமது திறந்த பல்கலைக்கழக மாணவர்களின் பெரும் முயற்சியின் பயனாக தைத்திருநாள் விழாவை முன்னிட்டு மீண்டும் ஒரு முறை இம்மருதம் மலரினை சிறப்பாக வெளியிடுவதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

மலருக்கு மணமும்,

தேனுக்கு சுவையும்,

பறவைக்கு சிறகும் இன்றியமையாததைப்போல மருதத்திற்கு வார்த்தைகள் இன்றியமையாதது. எனவே தான் மனதில் எழுந்த சிந்தனைகளுக்கு வார்த்தை வடிவம் கொடுத்துள்ளார்கள் எம்மவர்கள்.

காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீராக்கே உள. (குறள் 527 )

அதாவது காக்கைகள் தமக்கு கிடைக்கும் இரையை மறைக்காமல் தன் இனத்தையும் அழைத்து பகிர்ந்து உண்பது போல எம்மவர்கள் தங்களுக்கு கிடைத்த அறிவு எனும் இரையை இச்சஞ்சிகையின் மூலம் உங்களுடன் பகிர்ந்து கொண்டுள்ளார்கள்.

உழவர்கள் தைத்திருநாளைக் கொண்டாடுவது சூரிய பகவானுக்கு நன்றி செலுத்துவதற்காகும். அவ்வகையில் இச்சிறப்புமிக்க திருநாளில் மருதம் சஞ்சிகை சிறப்பாக வெளியிட காரணமானவர்களை மறப்பது நன்றன்று. எனவே இம்முறை மருதம் சஞ்சிகை சிறப்பாக வெளியிட பல்வேறு வகையிலும் உதவிகளை புரிந்த அனைவருக்கும் எனது நன்றி கலந்த தைத்திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**வ. தனராஜ்**
செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர் பக்கம்

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தில் தோன்றியது நம் மூத்த குடியான தமிழ் குடி. இத் தமிழைப் பறைசாற்ற ஏது மொழி. இத் தமிழ் மொழிச் சிறப்பிற்கு இல்லை பழி. பழமை, எளிமை, இனிமை என்னும் சொல்லிலடங்கா தனிச்சிறப்பு நம் தமிழுக்கு. தமிழ் பேசும் நம்மவர் பாரம்பரியம், சூரிய பகவானுக்கும் உழவர் பெருமக்களுக்கும் நன்றி தெரிவிக்கும் தைத் திருநாளன்று இம் **மருதம்** மலர் வெளியாவதே தனிச்சிறப்பு. இதை வெளியிடுவதில் அளவில்லா ஆனந்தம்.

இம்மருதம் மலர் எமது கலை, கலாச்சார விழுமியங்களைத் தழுவியதாகக் காணப்படுகிறது. இம் மலர் கவிதை கட்டுரை, மற்றும் பல் சுவை ஆக்கங்களை கொண்டுள்ளது. ஆன்மீகம், இலக்கியப் படைப்புக்களையும் இக்கால வரலாறுகளையும் எம் மாணாக்கரின் கைவண்ணம் காட்டுகிறது. தைத் திருநாளன்று இம் மலர்வெளியாகும் அதேவேளை, உங்கள் மனங்களுக்கு மருந்தாக அமையும் என நம்புகிறோம்.

இதழாசிரியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Hindu festivals in Sri Lanka

In Sri Lanka Buddhists, Hindus, Muslims and burgers are living. Each religion have its own festivals. Hindu festivals also fill the festive periods in Sri Lanka with its distinctly colorful ceremonies, making the Hindu shrines across the country full of emanating faith and happiness of people .

### Thai Pongal

Like all religious festivals, there are some interesting legends associated with Thai Pongal. Many of these are Indian origin. Normally Thai pongal festival falls on 14th of January. But Pongal festival is celebrated 3 days by Indians. Bhogi pongal is the first day of the festival. According to Hindu mythology there is a story of Lord Krishna and mount Kovardhana. The first day, Bhogi Pongal, is a day for the family. People decorate their homes. New vessels are bought and old and unwanted things burnt. Another legend associated with Lord Shiva. The third day of pongal known as Maatu pongal involves Lord Shiva and his mount Nandi, the bull. Also farmers pay their tribute to bull which helps them for plowing.

In an agriculture based civilization the harvest plays an important part. The farmer cultivating his land depends on cattle, timely rain and the sun. Once a year, he expresses his gratitude to these during the harvest festival. It is at this time of year that the farmer, having reaped the rewards of his hard work, can celebrate this major agricultural festival.

### Sinhala and Tamil New Year

Sinhala and Tamil New Year is a festival despite being celebrated by both Hindus and Buddhists alike. It marks the completion of the solar circuit and has to be astrologically determined. So the Sinhala Avurudu may begin somewhere between 13 and 15 April, depending on the sages. As well as Tamil new year normally falls between April 13th and 15th according to their astrological calculations. Both the communities celebrate New Year on the same day.

There is an astrological conclusion to the old year and the few hours beyond the new are the neutral period which is reserved for religious activity, regardless of the religion one might practice.

The New Year customs and the rituals are carried out between members of one's family, business associates, local tradesmen and even beggars. New clothes are worn, horoscopes are foretold, money is given and special foods are made, served and offered to the gods.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Deepavali

Deepavali is a festival of lights celebrated by Hindus and usually held at the end of October or the beginning of November. Thousands of flickering oil lamps are lit to denote the triumph of good over evil as Rama returned after his period of exile and to welcome Lakshmi, the goddess of prosperity.

Deepavali is also known as Diwali that is celebrated for five days according to the lunar Hindu calendar. It begins in late Ashwin(September-October) and ends in early Karthikai(October-November). The first day is Dhan Teras. The last day is Yama Dvitiya, the 2nd day of the light half of Kartika. Each day marks one celebration of the six principal stories associated with the festival. The main two stories are The Return of Sri Ram after fourteen years of Vanvas(banishment). People at that time lit rows of lamps in his welcome. And second is the Killing of Narakasura:

## Vel festival

Vel is the Hindu festival held in Colombo during July or sometimes August to venerate the trident of Murugan, the god of war. The main event is a great gilded temple chariot which contains the ayudha(weapons) of this fierce god, headed by two humped black bulls but actually drawn by hundreds of devotees dressed in the egalitarian white waist cloth and shawl and smeared with holy ash. It's quite impossible to recognize some are Colombo's wealthiest Hindus amongst them.

Every year the vel of Murugan is carried in a procession. The procession starts at the Sea Street kovil in the Petah, in Colombo and moves on towards Bambalapitiya kovil that is nearly 5 km (3 miles) away. The temple whose turn it is goes to town with gaudy stalls selling souvenirs, sugar cane and sugary sweets of many hues. Don't worry if you are Late to catch the vel procession; the 6.5 - km (4-mile) journey proceeds at a snail's pace and takes a whole day, which makes it fabulous for the curious and a hideous slog tor the Hindus dragging the cart.

Hindu festivities are at their most vibrant in the Jaffna are during this same season; the Nagapooshani Ammal on the island of Nainativu, the Perumal and the Sellvasannathi at Thondamannar, where you can see some eye popping fire walking by devotees, are just some of a host of extraordinarily colorful festivals For the time being at least, the visitor to Lanka will miss these. But a smaller one, the Kali Festival at Munneswaram near Chilaw is entertaining and the Uddapu and Mundel festivals in July have some mean fire walking.

**Kajani Gnanachandran**
3rd Year
Electronics and Telecommunication Engineering Technology



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

# British College of Applied Studies

Head Office : 32, Dharmarama Road,
Colombo 6. Sri Lanka.

Tel : +94 112 559255, 2501145
Mobile : +94 773 1141105, 077 2834595
E-mail : isthi@bcas.lk
Web : www.bcas.lk

edexcel
UNIVERSITY OF WOLVERHAMPTON

முதன்முறையாக
இலங்கையில்
University of Wolverhampton, UK
வழங்கும்

LLB DEGREE
நீங்களும் நாளைய உலகின் சட்டத்தரணியாகலாம்

Hotline
2 55 92 55
www.bcas.lk

British
College of
Applied Studies
32, Dharmarama Road, Colombo 06.
Tel: 011 2501145, 077 3114105, 077 2834595



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைத்திருநாளும் தமிழர் நிலையும்

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள் எமது முன்னோர். ஆனால் இன்று வரை தமிழராகிய எமக்கு ஒரு முழுமையான விடுதலை அல்லது முழுமையான ஒரு சுபீட்சம் கிடைக்கவில்லை. இலங்கைத் தீவில் மட்டுமல்லாது உலகம் முழுவதும் தமிழ் மக்கள் சிதறி வாழ்கின்றனர். ஏன் இந்த நிலை? இது எப்போது நிவர்த்தியாகும்?

எமது நாடு சுதந்திரம் அடைய முன்னர் ஏற்பட்ட பல அரசியல் சிக்கல்கள் மற்றும் தந்திரோபாயங்கள் காரணமாக தமிழராகிய நாம் சிறுபான்மையினராக்கப்பட்டு பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருகின்றோம். எமது உரிமையை வென்றெடுக்க எமது தலைவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிவடைந்து அமைதியான எமது போராட்டம், ஆயுதமாக மாறியது. இதனால் ஏற்பட்ட இழப்புகள் ஏராளம். பல்லாயிரக்கணக்கான உயிர்களை இழந்து, பலகோடி பெறுமதியான உடமைகளை இழந்து எமது உயிரினும் மேலான உறவுகளை இழந்து நடுவழியில் நிற்கின்றோம். இவற்றினால் நாமடைந்த பயன்தான் என்ன? சிலர் நினைக்கலாம் இவ்வாறு ஏற்பட்ட பிரச்சினையால் தான் தம்ழ் மக்கள் வெளிநாடுகளில் வாழ்கின்றனர் என்று. இது உண்மை தான் ஆனாலும் எமது நாட்டையும், வீட்டையும் விட்டு இன்னொருவனுடைய நாட்டிலோ அல்லது வீட்டிலோ வாழ்வதென்பது ஒருவனுக்கு சந்தோஷத்தைத் தருமா? சொர்க்கமே என்றாலும் அது நம் வீட்டை போ வருமா? என்ற பாடினான் ஒரு தமிழ் கவிஞன். ஆம் என்னதான் உயர்ந்த வாழ்க்கை கிடைத்தாலும் தத்தமது ஊர்களில், வீடுகளில் வாழ்வது போல் ஒரு சுகம் வேறங்கும் கிடைக்காது.

ஆகவேதான் எமது வழிகள் பல்வேறு காலங்களில் பல்வேறு நிலைகளில் பல்வேறு விதமாக மாற்றமடைந்து ஒரு இலக்கை நோக்கி பயணித்தது. ஆனால் தற்போது அந்த நிலைமை தலைகீழாக மாறி விட்டது. கடந்த வருடம் ஏற்பட்ட போரில் எமது உரிமைப் போராட்டத்தை இழந்த நிற்கின்றோம். மேய்ப்பன் இல்லாத ஆடுகளாய் பாலைநிலத்தில் தவிக்கின்றோம். இந்து நேரத்தில் வெள்ளாடுகளிடையே கறுப்பாடுகளாய் எம்மவர்களில் சிலர் செய்யும் துரோகத் தனங்களும், ஆடுகளுடன் ஆடுகளாய் உள் நுழைந்து அமுக்க வரும் நரிகளுமாய் எம்மக்களை சிதைக்க பல்வேறு நிகழ்வுகள் அரங்கேறுகின்றன.

எமது கலாசாரம் சிதைக்கப்படுகின்றது. இது எமது கண்களினூடு தெட்டத் தெளிவாகத் தென்படுகின்றது. முன்பிருந்த அடக்க ஒடுக்கமும், கட்டுக் கோப்பும் , ஒழுங்கு முறைமையும் இப்போது இல்லை. எமது நிலங்கள் திட்டமிட்டு பறிக்கப்படுகிறன. எமது பெண்களின் கற்புகள் சூறையாடப்படுகின்றன.

இந்த தருணத்தில் உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்கள் ஒன்றிணைந்து செயற்படுவது போல் இங்குவாழும் நாமும் எமது வேற்றுமைகளை மறந்து எமது மனக்கசப்புகளை களைந்து எல்லோரும் ஒன்றிணைந்து என்ன நோக்கத்திற்காக எமது போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு நசுக்கப்பட்டதோ? என்ன நோக்கத்திற்காக பல்லாயிரக்கணக்கான உயிர்கள் இழக்கப்பட்டதோ, அந்த நோக்கத்தை நிறைவேற்ற முயற்சிகளை மேற்கொள்ளுவோம். எமக்கிடையே முளைத்துள்ள களைகளை முளையோடு கிள்ளி எறிந்து நல்ல பயிர்களாக எமது சமுதாயத்தை வளர்த்தெடுத்து நல்ல பயனைப் பெற இத்தைத்திருநாளில் உறுதிபூணுவோம். எமது அடுத்த தலைமுறை தலைநிமிர்ந்து வாழ எமது முயற்சிகளை ஆரம்பிப்போம். இந்த தைப் பொங்கலாவது எமது மக்களுக்கு விடிவை தருமா? எதிர்பார்ப்புடன காத்திருக்கும்

**ஜொகான் சஜீவ்** - லண்டனிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளைச்சல் எங்கே.......?

ஞாபகங்கள் நெஞ்சிலிருக்க,

என் பேனா முனைகளில்......

உந்தன் சுவடுகள் தடயமாகியது.

நேற்று என்பது வசந்தகாலம்,

இன்று நம் கல்லூரிக்காலம்

நாளை .... அது உன் கையில்

போட்டியுள்ள இச்சமூகத்திலே,

உன் அமைதி....

பாராட்டிடவே எண்ணுகிறது.

பாசவலையிலே பிணைபட்டு,

வாழும் உந்தன் உணர்வு

உத்தமமானது.

தொலைக்காட்சித் தொடர் போலவே,

தொடர்கதையானது நம் நட்பு.

விலைமதிக்க முடியாத நட்பிலே,

விதைக்கப்பட்ட நம் நட்பின்

விளைநிலம் இங்கே...

விளைச்சல் எங்கே....?

பகீரதா தேவராசா
இலத்திரனியல் பொறியியற் பீடம்
2ம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் நீ

நான் நினைத்தது
நண்பர் என்றல்ல,
உற்றார்கள் என்றல்ல,
உறவினர்கள் என்றல்ல,
அன்பர்கள் என்றல்ல,
ஆதரவாளர்கள் என்றல்ல,

நான் பிறந்த அதே
தாய் வயிற்றுத் தொப்புள்
கொடி உறவென்று...
ஆனால் நீங்களோ!

என்னை நினைத்தது
நண்பி என்றல்ல,
தங்கை என்றல்ல,
தமக்கை என்றும் அல்ல...

பெண் கொண்ட பேதை என்றா?
நட்பு, உறவு, உற்றார்,
உறவினர், அன்பு, ஆதரவு
இல்லா இடத்தில் !!
இனிய சகோதரங்களுக்கு
நன்றி உணர்வுடன் இவள்...

**தர்ஷிகா ஜெயம்**
1ம் வருடம், இயந்திரவியல் பீடம்

# "என் நண்பன்"

கவிகள் பல வரைவேன் நான்
அதற்குள் காதல் கவிகளும் கூட
ஆயினும் உன்னை வடிக்க முடியாமல்...

நம் நட்புக்கு ஒரு கவியா
கவிக்குள் எத்தனை வரையறைகள்
வரையறைகள் வேண்டாமே...

"நட்பு" எனும் மூன்று எழுத்தினுள்
எத்தனை எத்தனை அர்த்தங்கள்
அத்தனை உணர்வுகளும் பத்திரமாக..

நான், நட்பு, நம் நட்பு
இதுவே போதுமடா எனக்கு
விளக்கங்கள் வேண்டாமே....

**யோ. யேன் கறோலினா**
பொறியியல்பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

# V. MANICKAM & BROTHR




34, 4th Cross Street,
Colombo - 11

Tel: 2323986, 2323408

*With Best Compliments*

# MYLINX

Network Design, Installation, Supports & Troubleshooting Business and Computer System Disaster Recovery Planning Voice Over IP Solutions (VOIP)

No. 9, Alexandra Road,
Colombo 06.
Email: iso@sltnet.lk
Web: www.gobigit.com
Tel: +94 112 598871 Fax: 94 112 505264

*With Best Compliments*

# YARL HOTEL

*Non Vegetarian Restaurant*

சகல விதமான ஓடர்களும்
ஏற்றுக்கொள்ளப்படும்




No.46/1,
Station Road,
Wellawatta,
Colombo 06.

Tel: 259 3905
Mobile: 077 911 3038

*With Best Compliments*

# POOJA

## MOBILES

All kind of Mobile Accessories Phone Repairing, Unlocking, Software Updating




No. 5A, Manning Place,
Wellawatte.
mobile: 0777 242 636
e-mail : sharul1383@yahoo.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உண்மை எது?"

நீ முன்னே பார்க்கிறாயா....? "சரி"

சற்று பின்னே பார்....

எவ்வளவு ரசனை மிக்க இன்பங்களினதும்

துன்பங்களினதும் சுகங்கள்!

"நீ ரசனையுள்ளவனா"

விண்வெளி புவியின் உள்ளே எத்தனை மாற்றங்கள்!

சற்று நீ திரும்பியதுண்டா

"எதனை ரசித்தாய்!"

மாற்றம் செய்ய விரும்புகின்றாயா?

அது சிறந்த காலம்

போதும் முன்னே பார்! அது உன் எதிர் காலம்

உன் எதிர் கால பார்வையிலாவது நீ விரும்பிய

மாற்றத்திற்கும், உன் ரசனைகளிற்கும் உயிர்

கொடுக்க தயார்படுத்தி கொள்

நீ ரசனை மிக்கவனானால்

**பு.லோகநாதன்**
1ம் வருடம்
இயந்திரவியல் பொறியியல் பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்சிகரமான புதிய கல்வித்திட்டம்

"அக்கரைச்சக்தி"

இன்றைய பாடசாலைக் கல்வியில் இனங்காணப்பட்ட குறைபாடுகளைத் திருத்தும் நோக்கில் புதிய கல்வித்திட்ட மறுசீரமைப்பு 2007ம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மகரகமவில் அமைந்திருக்கும் தேசிய கல்வி நிறுவகம் புதிய கல்வித்திட்ட மறுசீரமைப்புக்கான வடிவமைப்பை உருவாக்கி அதை அமுலாக்கும் முயற்சியை மேற்கொண்டுள்ளது. இதுவரையில் நடைமுறையிலிருந்த கல்வி அமைப்பானது, தெரிந்த விடயங்களை மெருகூட்டுவதிலும், ஏற்கனவே முடிவு செய்தவற்றை கற்பதிலும், இருக்கும விடயங்களை மீண்டும் அதே அடிப்படையில் கட்டியெழுப்புவதிலுமே கல்வியாளர்களை ஈடுபடுத்தியது. இந்நிலையை மாற்றியமைத்து தெரிந்தவற்றை மாற்ற முயற்சித்தும் புதியனவற்றை கண்டறிந்தும், எதிர்காலத்திற்குத் தேவையானவற்றை உருவாக்கியும் நாளைய வெற்றிக்காகத் தயார் நிலையில் இருக்கக்கூடிய மாணவர் கூட்டத்தை உருவாக்குவதையே அடிப்படை நோக்காகக் கொண்டு மறுசீரமைப்புத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக வகுப்பறையில் ஆசிரியரின் வகிபாகமும், மாணவரின் வகிபாகவும் புரட்சிகரமான முறையில் மாற்றத்துக்குள்ளாக வேண்டியுள்ளது. ஆசிரியரிடமிருந்து அறிவு வெறுமனே கடத்தப்பட்டு மாணவரிடம் படிவதற்குப் பதிலாக மாணவர் மைய தேர்ச்சி மைய செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட முறைமை புகுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக வகுப்பில் கற்கும் ஒவ்வொரு மாணவனதும் மாணவியினதும் சிந்தனைத்திறன்கள், சமூகத்திறன்கள், தனிப்பட்ட திறன்கள், அறிவை தேடியறியும் திறன்கள் என்பவற்றை விருத்தி செய்யும் பெரும் பொறுப்பை ஆசிரியர் தம் தோளின் மீது சுமக்கத் தயாராக வேண்டிய கடப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. புதியவகையில் சிந்திப்பதற்கும் நாளாந்த அனுபவங்களூடாக ஆழ்ந்த அறிவைப் பெற்றுக்கொள்வதற்கும் பகுப்பாய்வுத் திறன்களை வெளிக்கொணர்வதற்கும் மாணவர்க்கு வாய்ப்பளித்து சரியாகத் தீர்மானங்களெடுக்கக் கூடிய பிரச்சனைகளைத் தீர்க்கக் கூடிய புதியதொரு சமுதாயத்தை எதிர்காலத்தில் உருவாக்குவதில் ஆசிரியரின் அர்ப்பணிப்பு மிகுந்த பணி எதிர்பார்க்கப்படுகிறது.

கல்வியினால் மூளையை மட்டும் போஷிக்கும் முன்னைய முறையை மாற்றி உள்ளத்தையும் போஷித்து நல்ல மனப்பாங்குள்ள பிரஜைகளை உருவாக்குவதே புதிய கல்வித்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். புத்தறிவைப் பெறுவதற்கு ஆசிரியரையே நம்பியிருக்கும் நிலை நாளைய உலகில் சாத்தியப்படாது என்பதனால் அறிவு துரிதமாகப் பெருகிச் செல்லும் தற்போதைய நிலையைக் கருத்திற்கொண்டு புதிய கல்வி மறுசீரமைப்பின் அம்சங்கள் திட்டமிடப்பட்டுள்ளன.

வகுப்பில் மாணவரால் முன்னெடுக்கப்பட உள்ள குழுநிலைச் செயற்பாடுகளால், அவர்களின் சகபாடிகள் தொடர்பாகக் கவனஞ்செலுத்துவதற்கும் அவர்கள் கூறுபவற்றைப் பரிவுணர்வுடன் செவிமடுப்பதற்கும் அவர்களுடன் பகிர்ந்து பரிமாற்றிக் கொள்வதற்கும் பல்வேறு வாய்ப்புக்கள் கிடைக்கும். சிறுகுழு நிலையில் தேடிப்பெறும் அறிவை வகுப்பில் ஏனையோருடன் பகிர்ந்து பரிமாறியவாறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்காலத்தில் உருவாக்கத்தக்க பிரச்சினைகளைத் தைரியமாக எதிர்கொண்டு வெற்றிகொள்வதற்கு மாணவர்கள் தயாராவர். சகலவற்றையும் ஆசிரியரிடமே கேட்டுத்தெரிந்து கொள்வதற்குப்பதிலாக, வாசித்தும், கலந்துரையாடியும், அவதானிப்புகளில் ஈடுபட்டும், தாமாகவே செயல்களில் ஈடுபட்டும் ஆழ்சிந்தனையூடாகப் புத்தறிவைத் தேடிப்பெறப் பழகும் மாணவர்கள் தொடர்பாடல் திறன்களையும் தம்மிடையே வளர்த்துக்கொள்வர். குழுமுறைச்செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபடுவதால் ஏனையோரின் கருத்துக்களை சகிப்புத் தன்மையுடன் அங்கீகரிக்கப்பழகுவதோடு சிறு சிறு விடயங்களுக்குக்கூடப் பொறுமையிழந்து சினக்கும் பழக்கத்தை ஒதுக்கித்தள்ளி நேரத்தை வீணடிக்கும் வெட்டிப் பேச்சுக்களைத் தவிர்த்து அந்நேரத்தைச் சுய மேம்பாட்டுக்காகப் பயன்படுத்தி பணிகளின் விளைதிறனுக்காகத் திட்டமிட்டு செயற்படுவர். நல்ல ஆற்றல்களை வளர்த்துக் கொள்வர். புதிய வேலைகளைத் தாமாகவே தொடங்குவதற்கும் ஏனையோர் அறிமுகம் செய்யும் வினைதிறனுடைய மாற்றங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கும் பழகிக்கொள்வர். அவர்கள் சுய விளக்கத்தை வெளிக்காட்டுவதோடு பொருத்தமான முறையில் இடர்களை எதிர்கொண்டு முயற்சியாண்மை திறன்களையும் விருத்தி செய்து கொள்வர். இப்புதிய முறையியலுக்கூடாக பொறுப்புக்களை வகிப்பதற்கும் வகை சொல்வதற்கும் மாணவர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பானது வெற்றியளிக்கும் வகையில் கற்றல் கற்பித்தல் முறைமையை நெறிப்படுத்தும் ஆசிரியர் தேசிய நற்பணிகளில் அர்ப்பணிப்புடன் செயற்படுத்தத்தக்க சுயகட்டுப்பாடுடைய புதியதொரு சந்ததியை உருவாக்குவதில் பங்களிப்புச் செய்தவாறு தமது வாண்மைத் திருப்தியையும் மேம்படுத்திக்கொள்வர்.

புரட்சிகரமான புதிய கல்வித் திட்டத்தின் முன் மிகவும் சவாலாக அமையும் பகுதி க.பொ.த (உயர்தர) கலைப்பிரிவு மாணவரிடையே தொழில்நுட்பப் பாடங்களை அறிமுகம் செய்தலாகும். எமது அன்றாட வாழ்வோடு பின்னிப்பிணைந்து கணத்திற்கு கணம் புதியனவற்றைத் தோற்றுவித்துக் கொண்டிருக்கும் தொழ்நுட்பமானது உணவு உற்பத்தி, வைத்திய தேவைகள், உற்பத்திப் பொருட்கள், சக்திவளங்கள், எண்ணங்கள், தொடர்பாடல், போக்குவரத்து போன்ற அனைத்துத் துறைகளிலும் ஊடுருவி மாற்றங்களை ஏற்படுத்தி வருவதால் தொழில்நுட்பம் சம்பந்தப்பட்ட கல்வியை அனைவரும் ஓரளவுக்காயினும் கற்றிருப்பது அத்தியாவசியமானது. தொழில்நுட்பக்கல்வியின் அடிப்படையானது உள்ளீடுகள், மூலவளங்கள், செய்முறைகள், வெளிப்பாடுகள், பின்னூட்டல், மற்றும் கட்டுப்படுத்தல் போன்றவற்றில் தங்கியுள்ளது. பிரயோகம் இல்லாத தொழில்நுட்பக் கல்வியினால் சமூகத்திற்கு எப்பயனும் விளையாது. தொழில்நுட்பக் கல்வியானது கணிதத்தையும் பிரயோகித்துப் பணிகளைத் திறமையாகவும், வேகமாகவும், திருத்தமான முறையிலும், சிக்கனமாகவும் செய்து முடிக்கக்கூடிய அறிவை வழங்குகிறது. இதை உத்தேசித்தே கலைப்பிரிவு என்று ஒதுக்கி வைக்கப்படும் மாணவர்களையும் ஏனைய பிரிவினரோடு சமப்படுத்தி அவர்களின் இயல்பான திறமைகளை இனங்கண்டு சமூகத்திற்குப் பயனுள்ள பிரஜைகளாக உருவாக்க கல்வி மறுசீரமைப்புத் திட்டம் வழிவகுக்கிறது.

தேசிய கல்வி நிறுவகத்தின் தொழிநுட்பக்கல்வி திணைக்களமானது இந்த நடவடிக்கையில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. பல்கலைக்கழகங்கள் உயர் தொழில்நுட்ப கல்லூரிகளிலுள்ள அனுபவமிக்க பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மற்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிக்கள வேலைகளில் திறன்மிக்க பொறியியளாளர்கள் தொழில்நுட்ப நிபுணர்களின் ஒத்துழைப்பினை பெற்று தொழில்நுட்ப கல்வித்திட்டம் வடிவமைக்கப்பட்டு வருகிறது. ஆண்டு 12 இல் அடிப்படை வன்தொழில்நுட்பப் பாட நெறியாகவும் ஆண்டு 13 இல் வன் தொழில்நுட்பம், மென் தொழிநுட்பமெனும் இருபகுதிகளாகவும் இப்பாடத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. வன் தொழிநுட்பப்பிரிவில் பொறிமுறைத் தொழில்நுட்பம், குடிசார்பொறிமுறையியல் தொழிநுட்பம், மின்சார, இலத்திரனியல், தொடர்பாடல் தொழில்நுட்பமெனும் மூன்று பிரிவுகளும், மென்தொழிநுட்பத்தில், உயிரியல்மூலவள தொழில்நுட்பம், விவசாய தொழில்நுட்பம், மற்றும் உணவு தொழில்நுட்பம் எனும் பிரிவுகள் உள்ளன. இவ்விரண்டு பெரும் பிரிவுகளிலுள்ள ஆறு தொழில் நுட்ப வகைகளில் ஏதாவதொன்றை கலைப்பிரிவில் கற்கும் மாணவர் ஒருவர் விருப்பத்திற்குரிய பாடமாகக் கற்கலாம். இதனால் அம்மாணவர்க்கு அன்றாட தொழில்நுட்ப விடயங்களை ஓரளவாவது புரிந்து கொண்டு உலக ஓட்டத்தோடு ஒத்திசைக்கும் வாய்ப்பு ஏற்படும். அம் மாணவர் இதன் மூலம் மேலும் தொழில் நுட்பதுறை கற்கை நெறியை தொழிநுட்பக் கல்லூரியிலோ தொழில்நுட்பப் பல்கலைக் கழகத்திலோ தொடர்ந்து இறுதியில் தொழிநுட்பத்துறைப் பட்டதாரியாக வர வாய்ப்புள்ளதோடு தன் வாழ்க்கைத் தொழிலையும் இலகுவில் தேடிக்கொள்ள முடியும்.

தொழிநுட்பப் பாடநெறிகளும் ஆசிரியர் வழிகாட்டி நூல்களும் இலங்கையின் தேசியமொழிகளான சிங்களத்திலும் தமிழிலும் எழுதப்படுகின்றன. எனினும் தொழிநுட்பப் பதங்களை மிக அச்சொட்டாகத் தேசிய மொழிகளில் மொழி பெயர்ப்பதில் தான் சிரமம் ஏற்படுகின்றது. தொழிநுட்பதுறை கற்கை தொழிநுட்பப் பதங்கள் பெரும்பாலும் ஆங்கில மொழியில் தான் உருவாகின்றன. அவற்றைச் சில வேளைகளில் வில்லங்கமாக மொழிபெயர்க்க முற்படும்போது பதம் குறிக்கும் கருத்துச் சிதைந்து வேறு அர்த்தமும் தோன்ற ஏதுவாகின்றது. தேசிய கல்வி நிறுவனத்திற்காகச் சிரமப்படாது பெருந்தொகைச் சன்மானத்தை எதிர்பார்க்காது மொழிபெயர்ப்புப் பணியில் உள்ளனர் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்ட பாடத்திட்டங்களும் ஆசிரியர் வழிகாட்டி நூல்களும் காலவோட்டத்திற்கமைய மாற்றங்களுக்குள்ளாகி வருவதும் கண்கூடு புதிய மாற்றங்கள் எத்துறையில் நிகழ்ந்தாலும் அதைப்பொது மக்கள் அங்கிகரிக்கக் காலம் எடுக்கும் என்பது ஏற்றுக்கொள்ளத்தக்க உண்மையாகும். இது தேசிய கல்வி நிறுவனத்தால் அமுல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் புதிய கல்வி மறுசீரமைப்புக்கும் பொருந்தும். கல்வி மறுசீரமைப்பு எதிர்பார்க்கும் மனமாற்றத்தை மாணவரிடமிருந்தும் ஆசிரியரிடத்தும் ஏற்படுத்துமா எனச்சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதை விடுத்து, மாற்றத்தை ஏற்படுத்தியே தீருவது என்று உறுதி கொண்டு அனைவரும் ஒரே முகமாய்ச் செயற்பட வேண்டும் என்பதே இம்மறுசீரமைப்பை ஏற்படுத்துவதில் முனைப்பாகச் செயற்பட்டுக்கொண்டு இருக்கும் தேசிய கல்வி நிறுவகத்தின் உதவிப்பணிப்பாளர் நாயகம் தேசமான்ய கலாநிதி இந்திரலீலாமணி கினிகே அம்மையாரின் எதிர்பார்ப்பாகும்.

**சா. சக்திதாசன்**
இயந்திரப் பொறியியல் விரிவுரையாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமைப் பெண்

கண்கள்,

ஒளிவீசிடும் அகல் விளக்கு

மாட்டு(ம்) பெண் வந்ததும்

மாறி விடுவதேன் மாமியின் கண்கள்

பன்னீர் அருந்துவதால் - அவள்

கண்ணீரைச் சுவைப்பார்கள்

அவள் (வாழ்க்)கை நசுக்குவது

அது வேறு யாரும் அல்ல

அம்(மா)மிக் குழவி யாரும் அல்ல

அதனால் அவள் புகுந்ததோ

அக்கினிப் பிரவேசம்

மறு ஆடி வந்ததும்

மஞ்சள் நீராடும் முன்பு

மண்ணெண்ணையில் அவ்

தீ நீராடி விட்டாள்

அகல் விளக்கே

தீபாராதனைக்கு பயன்பட்ட நீ

தீடிரென அந்(து)தப் பூச்சியை

அழித்ததேன்?

**மயூரி ஜெயக்குமாரர்**

3rd Year

Electronic and telecommunication Engineering



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

# NEW SOTHY STORES

General Merchants &
Commission Agents
Wholesale Dealers in
Rise & Ceylon Agents

26, St John's Road,
Colombo 11.
Tel : 2430572, 2337177

*With Best Compliments*

# CHITRA TEA STORES

Dealers in tea, Paper bags,
Paper Plates, Paper Serviettes,
Brown Paper Bags &
Shopping bags items

Te l: 246, Bankshall Street,
Colombo 11.
Tel : 011-2435105, 0112-344346

*With Best Compliments*

# HENLY

*Electricals*

*Wholesale & Retail Dealers in Electrical Goods.*

**No. 100/14, 1st Cross Street,**
**Colombo-11.**
**Tel : 011-237148**
**Mobile : 077 3140494**

*With Best Compliments*

# The Silky World

Excellent Elegant Exotic Importers,
Wholesale and Retailers of
Textiles & Readymade Garments



**No. 224,**
**Main Street,**
**Colombo 11.**
**Tel: 5744344**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துள்ளித் திரியும் இளமை

வாலிபனே
உன் இளமைக் காலத்தின்
ஒவ்வொரு நொடியும்
அற்புதமடா

அதை நீ மறந்தால்
வீண் விளையாட்டிலும்
மதுவிலும் மாதுவிலும்
சூதிலும் களவிலும்
சிக்குண்டு சிதறிவிடுவாய்

முதுமை உன்னை அழைக்கிறது
அடைந்ததும் கைசேதப்படுவாய்
விட்ட தவறை
இழந்து உன் இளமையை
அடைந்த இழப்புக்களை
திரும்பப் பெறமாட்டாய்

சற்று நில்
திரும்பிப் பார் உன்னை
உன்னால் முடியும்
உலகுக்கு ஒளியேற்ற
உலகுக்கு வழிகாட்ட
உன் இளமைக்கு வாழ்வளிக்க

நீ இன்று விதைப்பது
நாளை விருட்சம் பெறும்
துடிப்பான இளமையில்
துல்லியமாக செயற்படு
சந்தோசம் பெறுவாய்
முதுமையில்
விழித்தெழு நலம் பெறுவாய்

M. ஜெகதீஸ்
1ம் வருடம்
குடிசார் எந்திரவியல் - பொறியியல் பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசமே விஞ்ஞானம்.......

அமைதியாய்ச் செயல்படு
இதயத்தால் பேசு
உலகத்தை வாசி
எண்ணியதை முடி
ஐக்கியம் முக்கியம்
ஓடுதளம் ஓய்வுக்கல்ல
எஃகு மனம் கொள்

ஆணவம் கொல்
ஈசல் சுகம் வீண்
ஊன்று கோல் அவமானம்
ஏங்குவது பிசகு
ஒன்றை நோக்கி செல்
ஔவையாய் நிமிர்ந்து நில்

நடிக்காது நிஜப்பாசம்
கடுகுக்குள் ஆயிரம் ஙீனு
தனித்துவம் பெற்றிடு
நிமிர்த்தனம் அழிவு
துகள்கள் தான் மலை
தெளிவாகு சிந்தனையால்
தொடாதே போதை

திடீர்புகழ் ஆபத்து
உடைபணி உயர்வாய்
தான் என்பது ஒழி
தீப்பொறி பார்வை பார்
தூரமில்லை ஆகாயம்
தேர்வு செய் உயர்ந்ததை
தோன்றிடு உதயமாய்

நம்பிக்கையே கடவுள்
நிற்காதே தாழ்ந்து
நுகராதே மயக்கத்தை
நெஞ்சை உரமாக்கு
நொருக்கு காமத்தை
பவ்வியமாய்ப் பழகு

நாவைக்கட்டு
நீயும் ஓர் அறிவாளி
நூலளவே தடைகள்
நேரடியாய் பேசு
நோட்டமிடு பகையையும்
பாசமே விஞ்ஞானம்

**கஜனி லோகசிங்கம்**
1ம் வருடம்
இயற்கை விஞ்ஞானம் 2009/2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*



# S.K TAILORS

***Specialist in Ladies Tailoring Shalwars***

***&***

***Saree blouse***






# 7/16, Orchard Complex, Galle Road, Colombo 06.

Tel: 011 4988416 | Mob: 077 9851719, 077 8577754

*With Best Compliments*

## VIDEO BLOSSOMS



Videogrphy, Photography (NLE) Editing,
8mm, VHS to CD, DVD,
NTSC ⇆ PAL Converting
Album Binding, Phot Framing

31/10, Plaza Complex, Rohini Road,
Wellawatte, Colombo - 06.
Tel :- 0112583053, 0718142637

*With Best Compliments*

## SHIIVAAH

***Photo & Communication***

**Digital Video Filming,**
**Photography**
**& Album Makers**





**No. 105 1/1v, Galle Road,**
**Wellawatte.**
**Tel : 077 7558971, 2505771**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரிய வைத்தது

கொழும்பில் கோழிக்காலும் பொரித்த சோறும் உண்டுபார் என்றான் நண்பன்
KFC யில் Coke ஒன்றால் பகட்டாக வாய் கொப்பளித்துக் காத்திருக்க உணவைக்
கணக்கெடுத்து போன சேவையாளனை காணாமல் கண்தேட
வீசிய பொரியல் நல்வாசத்தில் சிறுகுடல் சுரப்பிகள் ஊற்றெடுக்க
ஏறியது பசி தலைக்கு
தட்டிலே வந்த உணவோடு சிட்டையில் 2000 கண்டதும்
என் பசியோடு அடங்கியது கோழிக்கால் ஆசையும்தான்
வயிற்றுக்கும் அடி வேண்டாம், கையுக்கும் கடி வேண்டாம்
சிறுகடையாய் பார்த்து சில்லறைக்கு சாப்பிட
ஒரு கடை தேடி அதில் கொத்து ஒன்றை சொல்லி காத்திருக்க
கொத்து மாஸ்ரரின் தகர சங்கீதம் என்னை உசுப்பேற்றி எச்சிலூற
கழுவாத தட்டில் வந்த எச்சில் கொத்தினால் ஊறிய எச்சிலோடு
வற்றியடங்கியது என் கொத்து பசியும்
கடையும் வேண்டாம் கட்டுச் சாப்பாடும் வேண்டாம்
சொந்தக் கைதான் எனக்கினி உதவியென்று
சமைக்கப் போட்டேன் திட்டம்
சோற்றுக்காய் அடுப்பினில் பானை ஏற்றி அரிசிபோட்டு
அம்மாவை கேட்டேன் சோற்றுக்கு உப்பு வேணுமா என்று தொலைபேசியில்
ஆம் எனப் பதில் வர பருப்புக்கும் போட்டேன் உப்பு
வெந்தது சட்டிதான் இன்று வரை பருப்பல்ல
செஞ்சூட்டையும் தாங்கும் அவ் சட்டி பானை
சிறு பசியைத் தாங்காது என் பூ வயிறு
முட்டை யொன்றை பொரித்தேனும் நிரப்பி விட எண்ணி
மீண்டும் கேட்டேன் ஆலோசனை அம்மாவிடம்
வெங்காயம் மிளகாய் வெட்டி முட்டையை அதில் கலக்கி பொரி என பதில்வர
மிளகாய் வெட்டிய கையால் முகத்தில் வழிந்த வியர்வையை துடைத்தேன்
உடம்புக்கும் ஒத்தணம் கொடுத்தேன்
தொடங்கியது எரிவு கபாலம் முதல் கால்வரை
புரிந்தது அம்மாவின் கஷ்ட முகம்
சமையலின் சிரமமும்

**பா. இளங்கோவன்**
பொறியியல் பீடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

With Best Compliments from :

## G.C.E. (A/L) COMMERCE / ART & G. A. Q. / B.A

தன்னிகரற்ற ஆசிரியர்களைக் கொண்டு சகல பாடங்களையும் போதித்து 55 வருட காலமாக கல்விச் சேவையில் மங்காப் புகழுடன் திகழும் ஒரே தனித்துவமான நிறுவனம்.

**எமது முன்னணி ஆசிரியர் குழு**

**TAMIL / ENGLISH MEDIUM**

| | |
|---|---|
| ACCOUNTING | : திரு. A. குமாரவேல் B.com(Hons)<br>: திரு. ஜெகன் CIMA.Bsc.in comuting |
| ECONOMICS | : திரு. S. வரதராஜன் B.A. (Hons) |
| BUSI. STUDIES | : திரு. A. T. நந்தன் B.com(Hons), CMA(Pro.SL) |
| BUSI. STATS | : திரு. S. சுந்தரலிங்கம் B.com(Hons)FICMA |
| LOGIC | : திரு. K. கேசவன் (Special Trained)<br>: திரு. T. இராஜரட்ணம் B.A. (Hons) |
| TAMIL | : திரு. S. S. ஆனந்தன் B.com(Hons), CMA(Pro.SL) |
| POL. SCIENCE | : திரு. U. T. தமீம் B.A. (Hons) |
| HINDU CULTURE | : திரு. M. மனோகரன் B.A. (Hons) Dip.in.Edu |
| IC / ISLAM | : திரு. M.M.M. அக்ரம் B.A. (Hons) நளீமி |
| CHRISTIANITY | : திரு. N. ரஜனி B.A. (Hons) Dip.in.Edu |
| GEOGRAPHY | : செல்வி. B.F. தனுஜா சாந்தி |
| GE. ENGLISH | : செல்வி. B.F. தனுஜா சாந்தி |

* Carefully selected experienced teaching staff from leading educational institutions.
* Centrally situated comfortable class room complex pleasing disciplined environment.

**RAJESWARY INSTITUTE**
21, 26A, A.G. Hinniappuhamy Mawatha,
Colombo-13. Tel : 2434221.
E-mail : siva-rajes@hotmail.com
Contact Person : **Miss. Sasi**

With Best Compliments

LIM

## London Institute Of Management

**# 465 1/1, Galle Road, Wellawatte, Colombo - 06**
**(Opposite to Arpico Wellawatte)**
Tel: 0112 361668, 0114 255630, 0755 614170
Hot line: 0713 405109

**New year Offer Up to 15th February 2010 60% to 70%**

| Course | Old price | Offer price |
|---|---|---|
| Diploma In MS Office | ~~6000/-~~ | 1500/- |
| Diploma In Computer Studies | ~~6250/-~~ | 2500/- |
| Diploma In Graphic Designing | ~~9000/-~~ | 3250/- |
| Diploma In Multimedia | ~~40000/-~~ | 9500/- |
| Web Designing | ~~19000/-~~ | 4000/- |
| Dip. In. Com. Hardware Engineering | ~~4750/-~~ | 1800/- |
| Programming | ~~15000/-~~ | 5800/- |

**Diploma In AutoCAD**
2D Mechanical Drawing
3D Mechanical Drawing
2D House Plan
3D House Plan
Electrical Drawing
Plumbing Drawing
Sevior Drawing
Rs. ~~25000~~/-
**Rs. 7000/-**
2 Months

**Diploma In Spoken English with Grammar**
Introduction to Spoken
How to Speak English
Grammar
Conversation
Speech Training
Team Work
Listening
Letter Writing
Interview Facing
Presentation
Rs. ~~15000~~/-
**Rs. 6000/-**
4 Months

**Diploma In Computerized Accounting**
Acc Pac
Quick Book
M.Y.O.B
Tally
FULL SYLLABUS
Rs. ~~10000~~/-
**Rs. 2250/-**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோற்றவன்

அப்பாவின் பார்வையில் தண்டச்சோறு

அம்மாவின பார்வையில் வேண்டாதவன்

சகோதரர் பார்வையில் வெட்டி

நண்பர்கள் பேச்சில் இளக்காரம்

சமூகத்திற்கு இவன் தறுதலை!

பூமிக்கு பாரமானவன்

அவன் தலையில் மட்டும் தினமும் பூகம்பம் தோன்றும்

கண்களில் தினம் பல சுனாமி அனர்த்தம்

தலையனை முள் முடியாகும்

கட்டில் கூட கட்டாந்தரையாகும்

பூமி நரகமாகும்

கடவுள் கூட சாத்தானாக தெரிவான்

கண்கள் இரத்தக்கண்ணீர் வடிக்கும்

காதில் பஞ்சு வைத்தடைத்தாலும்

திட்டுக்கள் மட்டும் தெளிவாய் கேட்கும்

யார் பார்த்துச் சிரித்தாலும்

அது கேலிச்சிரிப்பாகத்தான் தோன்றும்

ஏன் பிறந்தோம் என எண்ணத்தோன்றும்

சாவு அழைப்பது போல் இருக்கும்

வாழ்வு வழியனுப்ப தயாராகும்

போவான் எங்கு போகிறோம் என்று தெரியாமலே

ரறயில் தண்டவாளம் நோக்கி

தோற்க வேண்டும் என யாரும்

திட்டமிட்டு தோற்பதில்லை

இது ஏன் யாருக்கும் புரியவில்லை.

**விஜயதர்ஷினி விஜயகோபால்**
முதலாம் வருடம்
வணிக முகாமைத்துவ பீடம் (BMS)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

From

The Management

of

# Janatha Steels

20, Quarry Road,

Colombo 12.

Tel: 011-2 421 412

Fax: 011-2 345667




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PEACE

For everything there is a season,

And a time for ever matter under haven:

A time to be born, and a time to die;

A time to be plant, and a time to heal;

A time to be break down, and a time to build up;

A time to be weep, and a time to laugh;

A time to be mourn, and a time to dance;

A time to be throw away stones,

and a time to gather stones together

A time to embrace, and a time to refrain from embracing

A time to be seek, and a time to lose;

A time to keep, and a time to throw away;

A time to tear, and a time to sew;

A time to keep silence, and a time to speak;

A time to love, and a time to hate,

A time for war, and a time for peace

**V. PANCHAPIKESAN**
CIVIL ENGINEERING
FACULTY OF ENGINEERING TECHNOLOGY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

நல்வாழ்த்துக்கள்...



**Shachin**

Shachin Shachin Shachi

**73-1/1,**
Manning Place, Wellawatte.
**0112 36 25 36 / 0774 210 101**
(upstairs - Virakesari Branch)
www.shachinads.com

**shachin**advertising

*With Best Compliments*

# 3S
# Distributions
## (Private) Limited

Distributors for NESTLE LANKA LTD.
Reckitt Benckiser Lanka Ltd.

No. 111 & 113, Old Moor Street,
Colombo - 12,
Sri Lanka.
E-mail : distributions3s@yahoo.com
Tel/Fax: +94-11-2436160,
+94-11-2336125

*With Best Compliments*

# Omega Traders

Importers & Exporters




No. 62 A, Old Moor Street,
Colombo - 12.

Tel: +94 11 2341747, 2432350
+94 11 5745371
Fax: +94 11 2434905

*With Best Compliments*

# KALA PHOTOS

உங்கள் பாஸ்போட், விசா,
மெடிகல், அடையாள அட்டை,
புகைப்படங்களை உடனே பெறலாம்



(பெரிய பள்ளிவாசல் அருகாமையில்
பழைய சதொச கட்டிடம்)

H. G. S. இல. 05, மௌலானாவத்தை, 1டிவிஷன்,
மருதானை, கொழும்பு-10

**No. 2A, M.J.M. Laffir Mawatha,**
**(Messenger Street) Colombo 12.**
**Tel: 0777 644887**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணகி மட்டும் தானா கற்புள்ளவள்?

'அழகு' என்றால் என்ன? அர்த்தங்கள் ஆயிரம் உண்டு.
எனக்கு பிடித்தது மட்டும் தான் அழகு என்றால்,
என் மனைவி மட்டும் தான் அழகு. 'அழகு' பண்புப்பெயர் என்பதால்
அதை விட்டுவிடுகிறேன் 'தவறு' என்றால் என்ன?
'சாவே நிகழாத ஒரு வீட்டில் ஒரு பிடி கடுகு வாங்கி வா''
என்ற புத்தரின் போதனை போல
கருப்பைக் குழந்தையையும் சவக்குழிப் பிணத்தையும் தவிர
தவறு இழைக்காதோர் யாருமில்லை போலும்.
'போரும்' கூட தற்போது புது அர்த்தம் பெறுகிறது
பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தம், மனிதாபிமானத்திற்கான யுத்தம்,
உலக சமாதானத்திற்கான யுத்தம் என்று
போருக்கும் அர்த்தங்கள் பல உண்டு.
பொருளாதாரசரிவில் சிக்கித்தவிக்கும் நேற்றைய
உலகப்பொலிஸ்காரன் இன்று அதிகம்
கவலைப்படுவது ஆப்கானிஸ்தான் போரைத்தான்.
'சரியான வழியில் இருந்தாலும் கூட அங்கே செயலற்று இருந்தால் உன் மீது
வண்டி ஏறுவதை உன்னால் தடுக்க முடியாது போய்விடும்'
இது தான் அடிக்கடி சொல்லப்படுகின்ற வேதம்
கண்முன்னே கணவனை இழந்த பின்பும்
தம் தலைவன் இன்றும் இருக்கிறான்
என்று நம்பும் விதவைகளை நாம் கண்டிருக்கிறோம்.
இருந்தாலும் நம்பிக்கை தானே வாழ்க்கை
நாளை விடியும் என்ற நம்பிக்கையில் தானே
இன்று படுக்கைக்கு செல்கிறோம்
இனி கற்பு'' என்றதுமே கண்முன்னே நிற்பவள்
மதுரையை எரித்த கண்ணகிதானே!
ஆக கண்ணகி மட்டும்தானா கற்புள்ளவள்?
இன்றைய பல்கலைக்கழகங்களில் மாணவிகள்
பரீட்சை நோக்கிற்காக'' காதலிப்பதுண்டு
அந்த பல்கலைக்கழகங்களிலோ, கல்லூரிகளிலோ, நிறுவனங்களிலோ வெறும்
'வடிவு'க்கரசிகள் ஸ்ரீதேவிகளாவும், 'வடிவேலு'கள் Spiderman''களாகவும்
அற்புதங்கள் செய்வதும் உண்டு.
இவர்கள் சொல்வதெல்லாம் 'கற்பு' என்பது தேவையானதுதான்
இருந்தாலும் திருமணத்திற்குப்பிறகு 'ஒழுங்காக இருந்தால்' சரி என்பதுதான்.
ஆக கற்பு'' என்பதை திருமணத்திற்கு முன், திருமணத்திற்கு பின்
என வரையறுக்க வேண்டுமா என்பது எனக்குத் தெரியவில்லை
இருந்தாலும் திருமணத்திற்கு முன்பு என்பதை இப்போது நான் விட்டுவிடுகிறேன்.
ஆக மதுரையை எரிப்பவளும், கற்பூரத்தைக் கையில் எரிப்பவளும்
மழையை வரவழைப்பவளும் மட்டும் கற்புள்ளவள் அல்ல.
எவள் தன் கணவனின் கண்களிலிருந்து
கண்ணீரை வரவழைக்காமல் குடும்பத்தை நிர்வகிக்கக்கூடியவளோ,
அவளும் கற்புள்ளவள் தான்.

**ஸ்ரீசண்முகான் கோகுலன்.**
சட்ட மாணவன் - இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

# RATHNA TRADER

## General Merchants

No.153, MainStreet, Bandrawela.
Tel : 057-2230182



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பித்தளை மொழிகள்

- குழந்தை மண்ணைத் தின்கின்றதா? பாவம், அதன் அன்னையின் சமையல் அப்படி!
- தங்கப்பல் கட்டியவன் சொல்வதெல்லாம் பொன்மொழி ஆகிவிடுமா?
- ஷாம்பு போட்டால் தலையில் நுரை :பாம்பு போட்டால் வாயில் நுரை!
- கை குலுக்குகிறவர்களையெல்லாம் நண்பர்கள் என்று நம்பி விடாதீர்கள். குத்துச் சண்டையில் முதலில் கை குலுக்கி விட்டு, பிறகு தான் மூஞ்சியில் குத்துகிறார்கள்.
- தூக்கத்தில் உளறினால் பிதற்றல், விழித்துக் கொண்டே உளறினால் தத்துவம்!
- செய்திகளைப் பிந்தித் தருபவர் வரலாற்று ஆசிரியர்!
- 1000 ரூபாவின் அருமை தெரிய வேண்டுமா? யாரிடமாவது 100 ரூபாய் கடன் கேட்டுப் பாருங்கள்.
- அகிம்சைதான் சிறந்த வழி, இதை எவனாவது மறுப்பானேயானால் அப்புறம் நான் வாயால் பேசிக் கொண்டிருக்க மாட்டேன் என்கிறார் ஒரு தேசத்தியாகி.
- நிர்வாணமாக நடிக்கிற நடிகைக்கும் ஒரு காஸ்டியூமர் (உடை அலங்கார நிபுணர்) இருப்பார்.
- மலர்களுக்கு சக்களத்தி மருக்கொழுந்து!

**தே. ஸ்ரீதரன்**
முதலாம் வருடம்
இயந்திரப் பொறியியல் பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

## G.T.V.Enterprises
## (Pvt) Ltd
## VIJEYA ENTERPRISES

**General Merchants, Commission Agents, Importers & Exporters**

No. 37, 4th Cross Street,
Colombo - 11. Sri Lanka.
Tel: 2445068 Fax: 2336889
E-mail: info@gtv enterprises.com

*With Best Compliments*

## LAUGFS GAS DISTRIBUTOR
## COCONUT OIL MILL

***Horagasmulla, Divulapitiya.***
***Tel: 060-2199925***

## Warehouse

***No. 554, Sri Pushparama Road, Ragama.***
***Tel: 2951255 | 2960308***

***SHOPS***

**Edirisinghe Enterprises**
**No. 145, 5th Cross Street, Colombo 11.**
**Tel: 2438261 | 2436185**


**D.N.Oil Stores**
**No. 119, 5th Cross Street, Colombo 11.**
**Tel: 2472310 | 2435686**

*With Best Compliments*

## T.M.B.
## ENTERPRISES

**General Merchants & Commission Agents**

**RICE 18**




**No. 18, Fourth Cross Street,**
**Colombo - 11**
**Phone: 2338239 - 4999958**

*With Best Compliments*

## Trinity Trading Lanka
## (Pvt) Ltd.

***Importers of 'V' Belts, all kinds of Bolts and Nuts, Asbestos Packing, Jointing & Hardware Merchants***



***192, Messenger Street,***
***Colombo-12.***
***Tel: 2470546, 2470547, 2470609***
***2470610, 4612650***
***Fax: 4627140***
***E-mail: trinity@eureka.lk***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்

அதிகாலையில் எழுந்திடு

காலையும் மாலையும் உலாவச்செல்

இரு வேளையும் உண்ட பின் பல் துலக்கு

நிமிர்ந்து நில், நிமிர்ந்து நட

உணவை மென்று சாப்பிடு

எல்லாவற்றையும் ஒழுங்காக வை

எல்லோரிடத்திலும் அடக்கமாகப் பேசு

மையினால் எழுது

இடது புறம் செல்

நன்றாக உழைக்கப் பழகு

உன் தகராறை நீயே தீர்த்துக் கொள்

பெரியவர் சொல்லுக்கு கீழ்படி

சிறியவர்களை நேசி

குறித்த நேரத்தில் எதையும் செய்

இயன்றளவு சுத்தமாக எழுது

மூர்க்கர்களை தொலைவில் வை

பெரியவர்களிடம் மரியாதையாகப் பேசு

சமமானவர்களிடம் மரியாதை காட்டு

செய்யும் வேலையில் கவனமாக இரு

# செய்யாதே

அவசரப்படாதே

காலத்தை வீணாக்காதே

மூர்க்கனாயிராதே

சுற்றி வளைத்து பேசாதே

உடல் நலத்தை கெடுத்து படிக்காதே

கெட்ட பழக்கங்களின் பிடியில் விழாதே

பொறுமை இழக்காதே

வீணாக உட்காராதே

தரையில் துப்பாதே

மலர்களை கொய்யாதே

இடையில் குறுக்கிடாதே

வீண் பேச்சு பேசாதே

மற்றவர்களை குறை கூறாதே

மற்றவர்களை கேலி செய்யாதே

மற்றவர்களையே நம்பி இராதே

மற்றவர் பொருளைத் திருடாதே

மற்றவர் வேலையில் குறுக்கிடாதே

மற்றவர்களோடு சண்டையிடாதே

புத்தகங்கள் மீது கிறுக்காதே

**த. நிதாஜினி**
2ம் வருட குடிசார் பொறியியல் பீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

W.C

# WOODLANDS COMPANY





**Importers exporters & Commission Agents**
**Dealers in All kinds of Local Produce**



**192, 4th Cross Street,**
**Colombo - 11**

*With Best Compliments*

# KAMALESWARY TEX





*Specialist in Wedding Sarees*

**Shalwars, Sarees,**
**Gents & Childrens wear**





214, Main Street, Colombo 11.
Tel: 2452878, 2473778



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் ஐந்தாம் தரத்தில்

உயர் தரத்தில் விழுந்து விழுந்து கற்று, திறந்த பல்கலைக்கழகத்திற்கு உட்புகவேண்டி, பெற்றோரின் உழைப்புக்கு வேட்டு வைக்க, சாவியில்லா பூட்டுக்கு சாவியுடன் அலைவதே நாம். அப்பெருமைக்கு கூட அளவுகோல் கிடையாது.

புதுப்புது முகங்களின் அறிமுகமும், புதுப்புது கல்வி முறையும், புதுமையான அனுபவங்களும் எப்போதும் பசுமையாக நம்மைப் புரிந்து கொண்ட அழகான நட்பும், நாம் புரிந்து கொண்ட அன்பான நட்பும் எப்போதும் இனிமையாக நண்பர்கள் எனும் போர்வையில், தமிழ் நட்புகளின் முன்னேற்றம் தான் எத்தனை எத்தனை.

தொலைக்கல்விக்கு ஒரு விளக்கம், அவ்விளக்கம் எமக்கு புரியா மொழியில் Level 3 என்போம். அதற்குள் எத்தனை பெருமையப்பா? ஆங்கில மொழிமூலக் கல்வியென்று பதிவு செய்வதோடு நின்று விட்டோம். எம்மவரே எம்மொழிக்கு தடைக்கல்லாயினர்.

நம் கலாசாரத்தைப் பேணுவதற்காகவே வருடத்தில் இரு விழாக்களாம். தைப்பொங்கல் விழாவினை கொண்டாட ஒரு புத்தக வெளியீடும் கூட எம்மவரின் கலாசார திறமைக்கு ஒரு போட்டிக் களம். இதற்கு கலாசாரிகளின் கலாசார கண்காணிப்பு எத்தனை எத்தனை.

காலையில் பேரூந்தில் ஏறி பல்கலைக்கழகம் சென்று கல்வியை மட்டும் கற்றிட முடியுமா? பல்கலையும் கற்றிடனும் தானே. பல்கலை பெற்றிடவே பல்கலைக்கழகம் புகுந்தாற்போல், பல்கலைகளும் தெரிந்தோ, தெரியாமலோ திணிக்கப்படுகின்றன.

ஆய்வு கூடங்களுக்கு ஆய்வுக்கு செல்வதோடு மட்டும் நிற்போமா என்ன? எம் திருவிளையாடல்களையும் விளையாட சந்தர்ப்பம் அளித்தாற்போல், பல குறும்புகள் Viva எனும் போது மட்டும் மன கலக்கம் Eligibility எனும் போது மட்டும் நடுக்கம் பிறக்கிறது. ஒரு வருடகாலமாக ஒரு பாடத்தை படித்தும் எதைக் காண்கின்றோம்? தொலைக்கல்வி தொலைவிலேயே நிற்க அடம்பிடிக்கிறதே. மீண்டும் ஐந்தாம் தரத்தினை கற்றாலென்ன என தோணுகிறதே.

திறந்த பல்கலைக்கழகம் புகுந்ததனாலேயே சில பல அழகான அனுபவங்கள். பிறர் வாழ்க்கையை விவாத மேடையிடும் நம்மவரிடம் இருந்து நமக்கே, அன்பான விடுதலை பெற்றிடுவோம். இளையோரே நீவிர் இளையோராகவே இருந்து விடுங்களேன். இவையெல்லாம், மூளையின் ஒரு சிறு மடிப்புக்குள் இருந்துவிட்ட ஒரு சில மனபதிவுகள் மட்டுமே. நினைத்தாலே இனிக்கும் என்பற்கிணங்க இருந்துவிட வேண்டி நிற்கும்.

**யோ. யேன் கறோலினா**
பொறியியல்பீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

**Sampath**

**STEEL**

***Importers & General Hardware Merchants***

**297, Old Moor Street, Colombo 12**

**Tel: 2440964, 2423789**
**Fax: 2478080**

*With Best Compliments*

**METRO METALS**

**Importers & General Hardware Merchants**

**37, Quarry Road, Colombo - 12. Sri Lanka.**

**Tel: 2440956, 2440954**
**Fax: 2433523**

*With Best Compliments*

**SEVANA**

**STEEL**

***Importers, General Hardware Merchants***

***No. 5-A, Abdul Jabbar Mawatha, Colombo - 12.***

***Tel: 2449337, 2343445, 4621868***
***Fax: 2385211***

*With Best Compliments*

*Vipaaki Mandhir*

***Wholsale & retail Dealers in textile***



**150**

***Main Street, Colombo 11.***

*072-3460515, 0777 556398*
*011 2449770*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழித்தெழு தமிழா

அநியாயம் அதோ என்று வாழ்ந்த காலம் போய்
அநியாயத்திற்குள்ளே அன்றாட வாழ்க்கை தமிழனுக்கு
யாழ் மண்ணில் பிறந்தாய் என்று பெருமை பேசிய தமிழனுக்கு
இன்று அவமானத் தலை குனிவு
கேள்வி கேட்டால் கேள்வி இல்லாமல் போய்விடுவான்
தலை தப்புவதற்காக தலை தெறிக்க ஓடியவனெல்லாம்
இன்று தலை நகரின் வீதி எல்லாம் பாச உறவுகளை விட்டு
பாவிகளாய் இங்கு வந்து படிக்க என்று போனால்
பகிடிவதை என்ற பெயரில் படித்தவனே செய்யும் முட்டாள்தனம்
வெளிநாட்டுப் பணத்தில் வீராப்பு பேசும் அன்ரிமார்கள்
வீரம் விளைந்த மண்ணில் பிறந்து விட்டும்
விலை போகும் இளையோர் கூட்டம்
வெட்டிப்பேச்சிற்கு வெள்ளவத்தையைப் பார்த்தால் புரியும்
தன் பிள்ளையின் தலை தப்புவதற்கு
தன் தலையை அடகு வைத்து
தந்தை தாய் வெளிநாடு அனுப்பினால்
போனவன் செய்யும் அடாவடித்தனத்தைச் சொல்லி வேலையில்லை
நம் இனம் போகும் போக்கிற்கு நாமே பாத்திர வாழிகள்
தன் மானம் உள்ள தமிழனே விழித்தெழு....

S.பிரதீபன்
1ம் வருடம்
இயந்திரப் பொறியியல் பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

MHC

## Modern Hardware Centre

**Importers, Dealers & Stockists of Iron and Steel**




**No. 43, Abdul Jabbar Mawatha,**
**Colombo 12. Sri Lanka.**
**Tel: 2435468 (Hunting)**
**Fax: +94 11 2431890**
**Email: modern43@sltnet.lk**

*With Best Compliments*

## LUCKY HARDWARE STORES

**Importers & General Hardware, Non - Ferrous Metal Merchants**



No. 161, Mahavidyalaya Mawatha,
Colombo - 13.
Tel: 2325094, 2439629,
Fax: 2338940

*With Best Compliments*

## ANTHON

**TRADING COMPANY (PVT) LTD**



**No. 191, Old Moor Street,**
**Colombo - 12. Sri Lanka**
**Tel: 2435101, 2439931, 5769436**
**Fax: 2345655, 5769438, 5769439**
**E-mail: anthontrading@sltnet.lk**

*With Best Compliments*

## MARUTHI TRADERS

**Importers, General Rice Merchants & Commission Agents**



No. 68, Old Moor Street,
Colombo - 12.
Phone : 2424013, 2424014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு தமிழர் கலாசாரம்

மாசுற்ற கொழும்புதானாம் எம் தலை நகரம்
மாசற்ற எல்லோர்க்கும் அது கொலை நகரம்
கேட்டால் அழவீர் நான் படும் பாடு
கொழும்பு வந்தாலே அழியும் நம் பண்பாடு

சின்னச் சிறுவனிடமும் இல்லை பிஞ்சு மனம்
ஆங்கே காண்போர் எல்லோரடமும் நஞ்சுக் குணம்
பத்து வயதுச் சிறுவனும் போதை குடிக்கிறான்
பத்தியம் சொல்லி திருத்தச் சென்றால் போத்திலால் அடிக்கிறான்

பழந்தமிழ் கலாச்சாரம் கொழும்புப் பெண்களிடம் துளியும் இல்லை.
சோப்பு, சீப்பு, குதிச்செருப்பு என வீட்டவர்க்கு பெருந்தொல்லை
நடுவீதியில் நின்று கொண்டு இழிக்கின்றனர் காட்டிப் பல்லை
காற்சட்டை போட்டுக் கொண்டு கதைக்கின்றனர் ஆங்கிலச் சொல்லை

அங்கு அங்கு கிழிந்து தொங்கும் அரைகுறையான உடை
மப்புக் கொண்ட மனிதர் போல அடக்கம் இல்லாத நடை
நாட்டிலே பெற்றோரை வருத்துகின்றது ஏறும் விலைவாசி
இந்த லட்டசணத்தில் வயது 10 முதல் 80 வரை ஆளுக்கொரு தொலைபேசி

எம் தமிழ் கலாசாரத்தை 38 வருடம் காத்த எம்மவரின் முடிவு
எம் தமிழ்த்தாயை அடிமைப்படுத்திய அந்நிய ஆட்சிக்கு விடிவு
திட்டமிட்டு இழைக்கப்படும் கலாசார சீரழிவிற்கு
கட்டுப்பட்டு எம் தமிழ்த் தாய்க்கு இழைக்கின்றோம் பேரழிவு

வேற்றுக் கலாசாரத்தை கற்றோம் எங்கள்
மெய்யான முதுச்சொத்தை விலைபேசி விற்றோம்
ஆற்றிலே புளி கரைத்திட்டோம் - ஐயா
எம் அருமந்த கலாசாரத்தை பேணாது கெட்டோம்.

**பா. இளங்கோவன்**
2ம் வருடம் - பொறியியல் பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

# KRISHO MULTI TRADES (PVT) LTD



62A, K.Cyril C.Perera Mawatha, (Formerly Bloemendhal Road)
Colombo 13, Sri Lanka.
Tel: 94-11-2342874, 4616616 Fax: 94-11-2433159
E-mails: krisho@eureka.lk, pbiint@sltnet.lk
Web: www.krishomultitrades.com

*With Best Compliments*

NCL

Nottingham College of London (Pvt) Ltd

## Scholarship Available

Study abroad in UK, Malta, Netherlands, Switzerland,
New Zealand, Singapore, and India

**Programmes (Undergraduate, and Postgraduate)**

**SAVE YOUR MONEY € 15,000/- Euros, £ 16,000/-, USD$ 20,000/-.**

www.lifetimencl.com
Nottingham College of London
No: 36 1/1, Station Road, Colombo – 06, Sri Lanka.
Phone: +94 (0) 11 2598059| Fax: +94 (0) 11 2552496
Website: www.lifetimencl.com
info@lifetimencl.com | international@lifetimencl.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கத்தாய்

அமைதி ஆதரவு இன்பம் ஈகை உண்மை என
அகரங்கள் அனைத்தையும் மொத்தமாய்
அச்சில் வார்த்தால் போல் என்னை - இவ்
அகிலத்தில் ஆளாக்கிய புனித ஜீவன்,...
நீங்கள் தானே அம்மா...

தந்தை தனது உணர்வு சுமைகளை
தங்களிடம் இறக்க. தாங்கள்
தாய்மை சுமையை தனதாக்கி கொண்டீர்களே....

வளிமண்டல வெளியில் விழி பார்க்கும் முன்னமே
தங்கள் உயிர் மூச்சில் உயிர் பிழைக்க வைத்தீர்களே...

பல இன்னல் மத்தியிலும் பத்து மாதம் என்னை பவுத்திரமாய்
பத்திய படுத்தி பாதுகாத்து - பிரசவத்தில்
மரண தேவனின் வாசல் வரை அழைத்துச் சென்றேனே

என் பெயருக்கு தலை பெயராக தங்கள் பெயரை இட மறுத்து
தந்தை பெயருக்கு இடமளித்தீர்களே,
தாய்மையின் பொறுமையும் விட்டுக்கொடுப்புணர்வும் இதுவா?

கர்ப்ப பாரத்தை இறக்கிய பின்னர் மழலை பாரத்தில் மனமிறங்கி
மகிழ்ச்சி கொண்டீர்களே கணவரும் பிள்ளைகளுக்குமாய்
வாழ்க்கை வகுத்தீரே

உதிரத்தை பாலாக்கி உரமாக்குகிறீர்
உடலை வியர்வையாக்கி வாழ வைக்கிறீர்
உலகங்கள் பல மாறினாலும் என்
உயிர் உங்கள் பாதங்களுக்கே சமர்ப்பணம்...

கற்பில் சிறந்தவள் யார் என்றால்?
நிச்சயம் யான் சொல்வேன் என்னை
ஈன்ற என்னிய தங்க தாய் தமயந்தி என்று...

மூவெட்டு ஆண்டுகள் நான் வாழ்ந்தும்
இதுவரை நான் கண்டதில்லை
கண்ணகி, மாதவி, நாளாயினி, சீதை
இவர்களை என் தாயை தவிர...

யான் இப்போதே இறக்க வேண்டுகின்றேன்
மீண்டும் தங்களின் கருவறை வந்து மடிதனில் தவழ்ந்து
மார்போடு ஒட்டி தேன் அமுதுண்டு உடல் உஷ்ண அரவணைப்பின் மிதந்து
உலகறிய உரைப்பேன் தாங்கள் தான் என் தங்க தாய் என்று

**தர்ஷிகா ஜெயம்**
1ம் வருடம், இயந்திரவியல் பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

TTS

# THIRUMALL TRADERS

**General Merchants & Commission Agents**
**Wholesale Dealers in Sri Lanka Produces**

No.198, Prince Street, Colombo 11.
Tel : 011-2343809




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பின் கரையோரமும் தென்றல் காற்றும்

வற்றாத நதிகள் ......//
வற்றாத குளங்கள் போல நீ என்றும் மின்னிடுவாய்....

உன் கனவுகள் ஒரு போதும் கலையாது பெண்ணே......//
இடர்கள் தாண்ட வெகுதூரம் இல்லை
காத்திருந்தால் புரியும் பெண்ணே உன்னைப் பெற்ற தாயும் பூரிப்படைவாள் ......//

வற்றாத நதிகளில் உள்ள தாமரைகளும்
சூரியனைக் கண்டதுமே கண் அடிப்பாள் ......//

வட துருவத்தில் இருந்து மின்னிடும் நட்சத்திரங்கள் போல நீ மின்னிடுவாய்
தென்கிழக்கு கடற்கரையில் இருந்து உன்னைக் கண்டதுமே
கண் அடிப்பேன் ......//

எல்லை அற்ற உலகில் உன்னைக் கண்டதுமே
என் தோழன் என்று சொல்லிடுவாள் ......//

பல்கலைக்கழக கூடமும், பாதைகளும் நாம் உலாவிடும் போது
பூத்திடும் மலர்களாகவும் தென்றலாய் வீசும் காற்றாகவும்
கபடம் அற்ற பிறர் உள்ளங்களும் ஒருமைப்பாட்டின் சின்னங்களாக இலைகள்
அனைத்தும் நம் வருகையின் போது வழிவிடும் ......//

கோயில் மணியோசை கேட்டதுமே உன் கண்கள் விழித்திட
என் நட்பை உனக்காக பரிசளித்தேன் தோழியே ......//

உன் உள்ளங்கள் கலங்கிடாமல் இருக்க
உனக்காக பிரார்த்தனை செய்திடுவேன் என் தோழியே......//

வற்றாத கல் ஓயா நதியை நம் நட்புக்காக கடலில் சங்கமிக்கச் செய்திடுவேன்
தென்கிழக்கு கடலில் இருந்து உன்னை முத்தாக எடுத்தேன்
எம் நட்புக்காக ......//

கருவறையில் உள்ள சிசுவும் இவ்வுலகம் நல்லது என்று எண்ணிடும்
அதைப்போல் பிறகும் நம் நட்பை எண்ணிடுவார்கள் ......//

செங்கம்பளம் விரித்திட நாம் ஒரு பிள்ளைகள்
என்று நட்பின் இலக்கணத்திற்காக வாழ்ந்திடுவோம்
என் தோழியே......//


**A.C. நிஸ்மத்**
BMS Programme - Faculty of Management

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

# MUSADIK BAG CENTRE

Wholesale & Retail Dealers in
all kind of School Bags, Traveling Bags,
Ladies Hand Bags, Umbrella, Suitcase,
Caps, Mosquito Nets, Fancy Goods
and Bag Accessories



# 146,, Prince Street, Colombo 11
Tel : 4737866

*With Best Compliments*

# சிவன் மாளிகை லிமிடெட்

# SIVAN MAALIKAI LIMITED

Aluminum, Brass, Eversilver, Enamel,
Plastics, Electrical Househol,
Appliance temple items, etc..

**166, (80), K.K.S. Road, Jaffna.**
**Tel : 021-2222996**

*With Best Compliments*



# SAAI NATHAN MARRIAGE SERVICES

No.27, Fernando Road,
Wellawatte, Colombo 6,
Sri Lanka
Tel : 2364146, 2363436
E-mail : nathan_met@hotmail.com

*With Best Compliments*






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய யாழ்.....?

பண்பாடுகளின் சொர்க்கமாய் கல்வியின் சிகரமாய்
விளங்கிய யாழ் மண் - இன்று விளங்காமல் போய்விட்டது
பண்பு பாழாகி கலாசாரம் களைந்து படிப்பு பறந்து நாகரீகம் களைந்து
சீரழியுதடா யாழ் மண் (எம்மண்)

போரின் அவலங்கள் மாறாத நிலையில்
விஜய் அன்ரனியின் குத்துப்பாட்டில் தம் நிலை மறந்து
ஆடிக்களைத்து விட்டனர் - எம் யாழ் விடலைகள்

தமிழன் பட்ட அவலத்திற்கும் படும் துன்பத்திற்கும்
ஓ பியா பியா, ஓ பியா பியா ..... பாட்டுக்கும் டும் டும் மேளமும்
பதில் கூறுமா மானமுள்ள தமிழா நீ சிந்தி!

ஒரு காலத்தில் கல்வியே கதியென்றிருந்தவன் - இன்று வீதியே கதி என்று சாகிறான்
15 வயது முதல் 30 வயது வரை றோட்டில் வம்பளப்பதும் நங்கையரை நக்கலடிப்பதும்
தகாதவார்த்தைதனை வாயால் பேசுவதும் ஏனடா வாலிபா?

தமிழனிற்கு நன்மை செய்வதாகச்சொல்லி நடத்தும் களியாட்டங்களிற்கும்
கூறும் அறிக்கைகளிற்கும் நீ அடிமையாகாதே தமிழா
இவை காலம் காலமாய் நடப்பவை! தான் ஆனால் இன்றும் தமிழனின் நிலை? (சிந்தி)

சொந்த மண்ணிலே நிர்க்கதியாய் நிற்கும் எம்
இரத்த உறவுகளை எண்ணிப்பார்! உனக்கு உண்மை புரியுமடா?
எங்கேயடா இருக்கு தமிழனிற்கு உரிமை? எங்கே இருக்கு சுதந்திரம்?
எல்லாமே கண் துடைப்பு நாடகம் தானடா

ஒரு புறம் நமக்கு களியாட்டங்களை காட்டிவிட்டு
மறுபுறம் எம் மண்ணிலே கல்விகாண நகராம்
பௌத்த சிலைநகரம் கட்டப்படுகின்றதே - இந்த
ஏமாற்று வித்தை உனக்கு இன்னுமா புரியவில்லை

எம் இனத்திற்காய், மொழிக்காய், இரத்தம் சிந்தி போராடியோரின் வழியில்
நீ செல்ல வேண்டாம் எம் பண்பாட்டையும், கலாசாரத்தையும்,
எம்மவரின் சொத்தான கல்வியையும் சீரழிக்காதேயடா
தொலைந்து போன அந்த யாழ் மண்ணிற்காக காத்திருக்கும்

R. **கோபிகன்** (லண்டனிலிருந்து)
தமிழ் நேசகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

# காந்தி மோட்டர்ஸ்

## இல. 66, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்டர்நெட் கலாட்டா

இளமை!
இளசுகளின் மேனியழகு !
முத்துச்சிதறலான பற்கள் !
முகமோ முழுநிலவு !
காதல் தேசம்!!

காந்த சக்தி கொண்ட!
கண்சிமிட்டிகள் கண்படும் !
இன்டர்நெட் !
சிங்காரிகள் உலாவரும் !
அரட்டை அரங்கம் !!

அள்ளி வீசிடும் !
பொய் மூட்டைகள் !!
பொத்தானை அழுத்தி விடும் !
வண்ணத்துப் பூச்சிகள்!
வளையல் சத்தம் சிலுங்க !
கலகலவென சிரிப்பலைகள் !
நடுவில் வளைய வரும் வண்டுகள் !!

வழிமேல் விழி வைத்து பார்த்திருக்க !
காதல் பித்தம் கிறுகிறுக்க!
நவீன சுயம்வரப் பெட்டி !
நளாயினிகள் நாட்டியமாடும் !
கலா மன்றம் !!

மதுரசம் ததும்பும் காமத்துப்பா?
கணனியில் யாரையோ தேடும் !
நோட்டம் !
இடையில் ஏற்பட்ட !
சதுராட்ட கிரக்கல்
மணவிழாவிற்கு அவள் போட்ட முன்னோட்டம் !
மனதை கல்லாக்கிக் கொள் !
காதலுக்கு அது தான் கடைசி அத்தியாயம் !!

S. ஹரிஸ்மர்
3ம் வருடம், பொறியியல்பீடம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

# SURIYAH Pvc Centre

Dealers In Hardware Electrical goods & Senitaryware, Stockist of S-lon Anton, National, PVC Pipes, Fittings, Casing and Water Tanks. Specialist In PVC Fittings Fabrication & PVC Welding Ect.,







*No.146, Massenger Street, Colombo-12*


*T'Phone: 5632493 Tel/Fax: 5653613 Mobile: 077 3464142.*

*With Best Compliments*

# KARUNA STEEL

Importers, Wholesalers & Retailers of General Hardware





No. 369 A, Old Moor Street
Colombo-12, Sri Lanka.
Tel: 2392223/ 4,2435124
Fax:4627646
E-mail: info@karunasteel.com

No. 372, Old Moor Street
Colombo-12, Sri Lanka.
Tel: 2434046/2437651
Fax:4714437
Website: www.karusteel.com

Stores : 388, Sri Sangaraja, Mawatha, Colombo - 10. Tel: 2432950



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியல் எப்போது

பொங்குகின்ற இத் தைத்திருநாளில்
எத்தனை லயங்களில்
அடுப்பெரியும் சத்தமோ!
கேட்கவில்லையா சூரியபகவானே!

தோட்டப் பிரமிட்டுக்களே
மலை நாட்டின்
மானம் காக்க உம்மால்
மறைத்தீர்களே!

பட்டுத் தெறிக்கின்ற
பனித்துளி வியர்வைகள்!
பட்டுப்பட்டு எம்பாவடை பூக்கள்
எல்லாம் பொலிவிழந்தன!

வியர்வை நீரில்
நிறம் வெளுத்துப்போன எம்
வறுமை சேலைகள்!
இன்றும் அவர்களின்
வறுமை மட்டும்
மலைநாட்டை பசுமையாக்கின்றன!

அடுப்பங்கரைக்கு மட்டுமே
இங்கு அடிக்கடி லீவு
நீண்ட பெருமூச்சுக்களை
நிதமும் உள்வாங்கி
சுவாசிக்க திணறிய தேயிலை
கொழுந்துகள் உயில்
எழுதியதாம் விடுதலை
எமக்கு எப்போது? என்று

வரம்பு மீறாத சம்பள கட்டணம்
பிஞ்சு சிறார்களை வாட்டுகின்ற
கொடிய பசி...
அவர்கள் என்னதான் பாவம்
இழைத்தார்கள் இப்பூமிக்கு
ஏன் இந்த வேதனை!

சிரிக்கும் தளிரை பார்த்தேன்
அதற்கு புரியவில்லை விடியலுக்காய்
கறுப்பு மணல் மீது காத்திருக்கும் ஏக்கங்கள்...
என்று தான் இம்மண்ணுக்கு
புதியதோர் வாழ்வு....


**வின்சன் போல் பிராங்**
3rd Year - Electronic and telecommunication Engineering



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

# HOTEL SRI VANI VILAS



256, Messenger Street, Colombo-12.
Tel: 2431382 Mob: 07777 60248




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்தோரின் முத்துக்கள்

1. நிறையப் படிப்பதை விட பயனுள்ளவற்றை படிப்பவன் தலைசிறந்தவனாக உருவெடுப்பான். (அரிஸ்டாட்டில்)

2. கடவுளுக்குக் கூட கடந்த காலத்தை மாற்றும் சக்தி இல்லை. (சாமுவேல் பட்லர்)

3. புன்னகை என்பது ஒரு பாஷை. அதை சிறிய குழந்தைகளால் கூட புரிந்து கொள்ள முடியும் (ஜார்ஜ் சந்தியானசு)

4. மிகப் பெரிய காரியங்களை மிகச் சுலபமாகச் செய்து முடிக்க முடியும். ஏனெனில் அதற்கு பலத்த போட்டி இருக்காது. (வில்லியம் வேனிஷ்)

5. ஏதாவது ஒரு வழியை கண்டு பிடிப்போம். இல்லாவிட்டால் ஒரு புதிய வழியை உருவாக்குவோம். (ஹனிபால்)

6. சாதனைகளைப் படைப்பதில் மிகவும் கடினமானது அதை ஆரம்பிப்பதுதான். (ஜேம்ஸ் ரஸ்ஸல்)

7. சோம்பேறிகள் ஏதாவது செய்ய வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருப்பார்கள் (வில்லியம் ஃபிளாக்)

8. பெரிய மனிதர்கள் தங்களுக்கு சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை என்று புகார் செய்ய மாட்டார்கள். (ரால்ஸ்வால்டோ)

9. பேச்சு எழுப்பும் சத்தத்தை விட செயல்கள் அதிக சத்தத்தை ஏற்படுத்துகின்றன. (எமர்சன்)

10. ஒவ்வொரு வெற்றி பெற்ற மனிதனுக்குப் பின்னால் வெற்றி கிடைக்காத பலவருட உழைப்பு மறைந்திருக்கும் (மார்க் ப்ரௌன்)

11. மிகவும் அழகானது அன்புணர்வே. மிகவும் ரம்மியமானது நம்பிக்கையே (வில்பிரட்பக்)

12. பெருமைக்காரன் கடவுளை இழக்கிறான். பொறாமைக்காரன் நண்பனை இழக்கிறான். (மார்க்கோ)

13. தீய பழக்கம் சிலந்திவலை, நாளடைவில் அதுவே இரும்புச் சங்கிலி. (எட்வர்ட்ஸ்)

14. ஒருவனின் தற்பெருமை எங்கு முடிவடைகிறதோ அங்குதான் ஒழுக்கம் தொடங்குகிறது. (யங்)

15. உலகத்திலேயே மிகவும் மலிவான பொருள் அன்புதான். (இங்கர்சால்)

**தனுஷா சிவஞானசுந்தரம்**
இயற்கை விஞ்ஞானம் 2009/2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*



# Ram Bros
**(PVT) LIMITED**

140, Main Street, Colombo-11.
Tel : 2320127, 2447698
Fax : 2543424
E-mail : rambros@eureka.lk

**DEALERS IN ALL KINDS OF TEXTILES**

*With Best Compliments*

DH

# Dhawalagiri Hotel



**VEGETARIAN**
**Dhawalagiri A/C Veg. Restaurant**
**(1st Floor)**
**Fully Air - Conditioned**
**433, 2nd Division, Maradana, Colombo-10.**

## *Dhawalagiri*



Communication & Cyber Cafe, Photo copy & Laminating, Scan & Email
Net Calls & Binding & Colour Printing, Typing - English Tamil Sinhala. Printouts & Fax

***Studio & Video***

*Professional Wedding & Birth day & others*
*Photo Editing & Album Designing, Video Mixing, Visiting Card Designing*

**No. 433 2nd Division, Maradana, Colombo-10. Tel : 0112 673279 Fax : 0112 676320**
**dhawalagirislk@gmail.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MOTHER

I am wishing there is a better way,
To tell you the things I want to say
Some way to thank you for all you have done,
To help make my life a happier one
And yet my thoughts are hard to express,
How thankful I'm how proud I am too,
To have such wonderful mother like you,
So darling mother, this is to say
I love you more and more each day

I love you for the months of toil
And lessons taught me the soil
Your struggle to provide me,
And for each blessing given free,

I love you for gofts unseen
for your dearest shoulders on which
I lean and firm and gentle
touch of hand
And the magic way you understand
Thank for patience, kind and strong,
and the way you straightened out the wrong

For happy memories of the hours,
that I have shared with you
combined with special gratitude
for the thoughtful things you do
and thoughts of times when only
you know just the words to say,
to encourage, to help and to
comfort me and brighten up may day.
So with appreciation dearest mother,
for love that's real and true
life's rarest gift....
I send these thoughts, straight from my heart
to YOU, my MOTHER

**Balasubramaniam Srividya**
1st Year, Engineering Faculty



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

CHS
ESTD 1973

# COLONIAL
## HARDWARE STORES

**Importers, Distributors & General Hardware Merchants.**



*# 427, Old Moor Street, Colombo 12, Srilanka.*
*Tel: 2431950, 2435414, 2347981-83-89*
*(Direct)2471003, 2387827,2391792*

*Fax:2334090,2387826*
*Hotline: 0777 399416, 0777 760132*

*E-mail: colonial@slt.lk info@colonialhw.com*
*Web:www.colonialhw.com*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னால் தா(ன்)னடி

உன்னைப்பார்த்த நாளில் இருந்து
நெல்லைப் போல் முளைத்தேன்
புல்லைப் போல் பணிந்தேன்
கீரைபோல் பிடுங்கினாய்
butter போல் உருகினேன்
எழுதி விட்டாய்
முடிந்த பேனையானேன்
சப்பிய bublegum ஆக துப்பிவிட்டாய்
மீண்டும் உன் செருப்பில் ஒட்டி விட்டேன்
காய்ந்த சருகிலும் உன்னைக் கண்டேன்
உதிர்ந்த மலரிலும் உன்னை முகர்ந்தேன்
கலைந்த கனவில் உன்னை உணர்ந்தேன்
கானல் மழையில் அடிக்கடி நனைந்தேன்
அணில் கடித்த மாம்பழமானேன்.
பொறியில் மாட்டிய எலியாய் துடித்தேன்
நீ எங்கே என்று உயிரை விட்டு தேடினேன்
அடக்கம் பண்ணி விட்டார்கள் என்னை
உயிர் என்பது என்றோ உன்னால் போய்விட்டது
ஆனாலும் கால்கள் உன்னைத் தேடி நடந்தது
என் கல்லறையும் நீ போகும் திசை நோக்கி நகரும்
அது 8வது அதிசயத்தை எட்டிப் பிடிக்கும்

**விஜயதர்ஷினி விஜயகோபால்**
1ம் வருடம்
வணிக முகாமைத்துவ பீடம் (BMS)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

# Veekay's

## Candy Land

**Importers, Exporters & General Merchants**



**No. 74, Old Moor Street, Colombo 12.**
**Tel: 2430549, 2336135 Fax: 2385441**
**E-mail: vkcl@sltnet.lk**

*With Best Compliments*

# STUDIO SATHA

***Quality Outdoor, Indoor Photographer & Video Filming***





**WE SELL**
**Professional Camera's**
**Related Professional Items**






**62 B, Kotahena Street,**
**Colombo 13.**
**Tel: 2330836**
**Hot: 0777 474957**

*With Best Compliments*

# NARMADAA ENTERPRISES

## JACKET KINGDOM

Wholesale & Retail Dealers in All kinds of Jacket Normal Jacket Double Jacket, Double Kit Jacket, West Coat, Out Cap Jacket Arm Coat Jacket, Raincoat, Rain Kit Baby Raincoat, Bottom, Gloves

No. 629/A, Negombo Road,
Mabola, Wattala.
Tel : 011 4855206


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரத்தின் மதிப்பு தெரிந்தவர்கள் இவர்கள்

ஒரு வினாடியின் மதிப்பு என்னவென்று
ஒரு விபத்தில்
உயிர் தப்பியவரை கேளுங்கள்.

ஒரு நிமிடத்தின் மதிப்பு என்னவென்று
புகையிரதத்தை தவறவிட்ட
பிரயாணியிடம் கேளுங்கள்.

ஒரு மணிநேரத்தின் மதிப்பு என்னவென்று
சந்திக்க காத்திருக்கும்
காதலர்களைக் கேளுங்கள்.

ஒரு நாளின் மதிப்பு என்னவென்று
வேலை கிடைக்காமல் போன
தினக்கூலியிடம் கேளுங்கள்.

ஒரு வாரத்தின் மதிப்பு என்னவென்று
வாரப்பத்திரிகை
ஆசிரியரைக் கேளுங்கள்.

ஒரு மாதத்தின் மதிப்பு என்னவென்று
குறைப்பிரசவமான
ஒரு தாயைக் கேளுங்கள்.

ஒரு வருடத்தின் மதிப்பு என்னவென்று
தேர்வில் தோல்வியடைந்த
மாணவனைக் கேளுங்கள்.

**பஞ்சாபிகேஷன்**
2ம் வருடம் குடிசார் இயந்திரவியல்
பொறியியல் பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைப்படகு

ஒரு இனிய இளங்காலைப்பொழுது, கதிரவனின் பெண்ணொளி பூமியைத் தொட்டு முத்தமிட, இளந்தென்றலின் ஸ்பரிசத்தால் பூமித் தாய் மெல்ல கண்வித்தாள். மலர்களின் நறுமணம் காற்றோடு கலந்து ஒரு தூய சுவாசத்திற்கு சுகம் சேர்த்தது. அந்த நொடியில் இயற்கையின் வசந்தம் மனதை திடப்படுத்தினாலும், அவள் சிந்தனையில் மாற்றமற்றவளாய்...

அன்று சத்யனுக்கு திருமணமாகி ஒரு வருடம் பூர்த்தியான நாள். சஞ்சனாவின் வாழ்வில் மறக்க முடியாத ஒரு நாளும் கூட... அவள் தனது பல்கலைக்கழக கல்வியினை இனிதே முடித்துக் கொண்டு வீடு திரும்புகிறாள். நீண்டதெரு இடைவேளையின் பின் அவன் நினைவுகளைச் சுமந்தவாறே, கூட்டமில்லாத அந்த ரயிலில் ஏறினாள் சஞ்சனா.
யன்னல் ஓரமாகக் கிடந்த இருக்கையில் சென்று அமர்ந்து கொண்டாள். யன்னல் வழியே வெளியில் தன் பார்வையைச் செலுத்தி, மீண்டும் அவ்விளங்காலைப் பொழுதினை இரசிக்கையில், அவள் முன் யாரோ பிச்சசைக்கார கிழவர் ஒருவர், அலுமினியத் தட்டுடன் பரிதாபமான முகத்தை காட்டி நின்றவரின் நிலை கண்டு அவராக கேட்குமுன் தன் பையிலிருந்து பத்து ரூபா தாளொன்றினைப் போட்டாள். உடனே அப்பெரியவர் பூரித்த முகத்துடன் "நீ நல்லா இருக்கணும் தாயே" என்றவாறு அவ்விடத்தை விட்டகலவே, தன் சிந்தனைக்கு திரும்பினாள்.

அப்போது சஞ்சனாவின் வயது ஏழு. சத்யனுக்கோ பதினேழு. தமது சிறுவயதுமுதல் இரு வீட்டாரும் குடும்ப நண்பர்கள். நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். சஞ்சனாவிற்கு சகோதரன் ஒருவனும் இருக்கின்றான். அவன்தான் முகேஷ், சத்யன் நண்பர்களாகவே பழகுவர். சத்யன் தன் வீட்டில் மூத்தவன். ஒரே பையன் இவர்கள் மூவரும் பாடசாலை தவிர்த்து ஏனைய நேரங்களில் ஒன்றாகவே திரிவர். எவ்விடத்திலும் மூவரையும் ஒன்றாக காணலாம். இவர்களுக்குள் சிறு சிறு சண்டைகளும் வருவதுண்டு. இவர்கள் போன்றே குடும்பத்தாரும் அவ்வாறே ஒற்றுமையுடன் ஒன்றாக இருந்தனர். பிள்ளைகளின் ஒற்றுமை கண்டு வேற்றுவரின் பார்வை பட்டுவிடுமோ என்று கூட அஞ்சினர். இப்படி இன்பமாக வருடங்கள் கடந்தோடின. சத்யனுக்கு ஆசிரியராக கடமை புரியும் வாய்ப்பு கிடைத்திருந்தது. ஆனால் அவனின் இலட்சியமோ அதுவன்று. இருந்தும் குடும்ப நிலை காரணமாகவும், பெற்றோரை தனக்காக சிரமப்பட வைக்க கூடாதென்பதற்காகவும் வேலையில் சேர்ந்து விட்டான். விருப்பத்துடன் தன் கடமையை சரிவர நிறைவேற்றினான். கடமையாற்றுகின்றான் என்றாலும், தன் நண்பர்களான சஞ்சனா முகேஷிடம் நட்பு வைத்திருக்கத் தவறவில்லை. இப்படி நாட்கள் செல்ல சஞ்சனாவின் உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளும் வெளியாகின. சிறந்த பெறுபேற்றினைப் பெற்று பல்கலைக் கழகம் செல்ல தெரிவாகியிருந்தாள். குடும்பத்தார் அளவில்லா மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினர். எல்லோரையும் விட அதிக ஆனந்தப் பட்டவன் சத்யனே, அவளுக்கு பரிசுப் பொருளொன்றினை வாங்கத்தரவும் மறக்கவில்லை.

அன்று அவள் பல்கலைக்கழகத்தில் காலடி வைக்க வேண்டிய நாள். வீட்டிலிருந்து அனைவரின் ஆசீர்வாதத்துடன் சத்யன் உட்பட தந்தையுடன் சிறு புடைசூழ புறப்பட்டாள் இலட்சிய பாதையின் அத்திவாரத்தை நோக்கி... அங்கே பல்பலைக்கழக்த்திலும்சரி ஹாஸ்டலிலும் சரி பல்வேறு வகையான பகிடி வதைகள். தனியாக இருந்து பழக்கப்படாதவள் அல்லவா? பெரும் துன்பத்தை அனுபவித்தாள். சஞ்சனாவை பிரிந்ததிலிருந்து சத்யனுக்கும் என்னவோ போலிருந்தது. பக்கத்திலிருக்கும் போது விளங்கவில்லை. அவளை விட்டுப் பிரிந்த போதுதான் அவனே உணர்ந்தான். தான் அவளை காதலிப்பதை. ... பின்னர் தனக்கு விடுமுறையான நாட்களில் சென்று அவளைப் பார்த்து வருவதையும், அவளுடன் தொலைபேசியில் உரையாடுவதும் பழக்கப்படுத்திக் கொண்டிருந்தான். இரண்டொரு தடவைகள் முகேஷையும் கூட அழைத்துச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றிருந்தான். அவன் அவளை காதலிப்பதை எவ்வாறு அவளிடம் கூறுவது என்று தடுமாறினான். மனதிற்குள் அவள் என்னை போல உணருவாளா? இல்லையென்று சொல்லிவிட்டாள்.... எதற்கும் மறுமுறை செல்லும் போது கேட்டுவிடவேண்டுமென நினைத்தான் அதே போல் கேட்டும் விட்டான். மறுப்பாளா அவள்? சிறுவயதிலிருந்தே அவனை தவிர வேறொருவருடன் பழகியதும் கிடையாது. கூடுதலாக எவரையும் பார்ப்பதும் கிடையாது. தன் உணர்வினையும் வெளிப்படுத்தி தங்களுக்குள்ளான காதலைப் பகிர்ந்து கொண்டனர். ஆனாலும் சிறு வெட்கத்துடன் தலை குனிந்து நிமிராது நின்றவளை வியப்புடன் நோக்கினான். அவ்வியப்பிற்கு காரணமும் இருக்கத்தான் செய்தது. அவளுடன் பழகிய ஒரு நாளில் கூட அவள் இவ்வாறு வெட்கித்து பார்த்ததில்லை என்றால் பின் வியப்படையாமல் என்ன செய்வான். அதன் பின் இருவரும் காதல் பறவைகளாய், ஆனால் தன் இலட்சியத்திலும் விட்டுக் கொடாதவர்களாய் விளங்கினர்.

இருந்தும் என்ன பயன்? வீட்டார் இவ்விடயமறியாது சத்யனுக்கு வயதாகிக் கொண்டு செல்வதை மனதில் கொண்டு, அவனுக்காக பல்வேறு இடங்களில் பெண் தேடி அலைந்தனர். ஒரு பெண்ணும் சரியாக அமையவில்லை. இவ்விடயம் பற்றி சத்யனுக்கு தெரிய வரவே, பல காரணங்கள் கூறி தனது திருமணத்திற்கு மறுப்பு தெரிவித்தான். பின் சஞ்சனாவின் வீட்டாரும் வற்புருத்தலாய் நின்றனர். "பெற்றோருக்கும் வயதாகிறது. அவர்களுக்குப் பின் உனக்கென்று ஒரு துணையை தேடிக்கொள்ள வேண்டாமா? காலம் முழுவதும் இப்படியே இருந்துவிட முடியுமா? என பல கேள்விகளை அடுக்கினாள். சஞ்சனாவின் தாய். சத்யனுக்கு தன் காதல் விவகாரம் பற்றி வீட்டில் தெரிவிக்க தயக்கமாக இருந்தது. வேறொன்றுமல்ல.. தமது காதலினால் பேணிக்காத்த நட்பு முறிந்து விடக்கூடுமோ, என்பது பற்றித்தான். அதுவும் அவனுக்கு வந்திராது தான். எனினும் அவ்வேளையில் தான் தனக்கும் சஞ்சனாவிற்குமிடையிலான வயது வித்தியாசத்தினையும், அவள் தற்போது படித்தே முடிக்கவில்லை என்பதையும் நினைவு கூர்ந்தான். இதற்கு தன் பெற்றோர் ஒப்புக் கொண்டாலும், அவளின் பெற்றோர் சம்மதிப்பார்களா? அப்படியென்றால் ஏன் வேற்றுவரை தேடுகின்றனர். அவர்களாகவே கேட்டிருக்கக்கூடுமே, என்று பலவாறு சிந்தித்தபடி அன்று நித்திரையையும் தொலைத்தான். எதைப்பற்றி சிந்தித்தாலென்ன சஞ்சனா தவிர அவன் மனதிலால் வேறொரு பெண்ணை நினைக்க கூட அவனால் முடியவில்லை. எனினும் பெற்றோர் சம்மதியாமல் இருவரும் மணந்து தனியே சென்று விட்டால் சஞ்சனாவின் இலட்சியத்திற்கும், குடும்ப ஒற்றுமைக்குமல்லவா பாதிப்பு ஏற்பட்டுவிடும். என்று எண்ணியவாறு ஒரு முடிவெடுத்தவனாய் பெற்றோரிடம் திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்தான். பெற்றோர் மகிழ்வுற்றபடி மீண்டும் பெண் தேடலாயினர். ஒருவாறு பெண்ணும் கிடைத்தாயிற்று. இன்னும் இரண்டே மாதங்களில் திருமணம் என பெரியோர் கூடி நிச்சயித்தும் விட்டனர். இருந்தும் சத்யன் மனதில் ஒரே போராட்டம். எவ்வாறு இதைப்பற்றி சஞ்சனாவிடம் தெரிவிப்பது என்று தான். அதன்பின் அடிக்கடி அவளைப் பார்க்க செல்வதையும் தொலைபேசியில் அழைப்பு விடுப்பதையும் குறைத்துக் கொண்டான்.

புதிதாக சத்யனை மணக்கவிருப்பவள் சந்திரா. அவளுக்கு சத்யனைப் பார்த்தவுடன் பிடித்து விட்டது. பின்னர் இல்லாமல் போக முடியுமா, தோற்றத்திலும் சரி நிறத்திலும் சரி அவ்வளவு அம்சமான உருவமது. அவளும் அவனுக்கு தகுந்த அழகுடனேயே இருந்தாள். என்ன பிரயோசனம் சஞ்சனாவை விட அவள் அவனுக்கு பெரிதாகத் தோன்றவில்லை. நிச்சயத்தின் பின் அடிக்கடி சத்யனுடன் தொலைபேசி அழைப்பிலும் இணைந்து கொண்டாள். அவனுக்கோ அது பெரும் சங்கடமாய் தான் இருந்தது. எனினும் என்ன செய்வதென்று தெரியாமல் மனதை திடப்படுத்திக் கொண்டு கதைக்கலானான். இப்படியே போக சஞ்சனா தன் நான்காம் வருட விடுமுறையின் போது வீடு வருவதற்கு தயாரானாள். ஆனால் எப்போதும் அழைத்துப் போக வரும் சத்யன் வராததையும், பல நாட்களாக தன்னுடன் ஒரு தொடர்பும் இல்லாமலிருப்பதையும் எண்ணிக் கலங்கினாள். எனினும் போய் சேர்ந்தவுடன் அவனிடம் சண்டை பிடிக்க வேண்டும் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் பல கனவுகளோடு சென்ற அவள், அங்கு அவளுக்காக காத்திருந்த பெரும் அதிர்ச்சி பற்றி அறிந்திருக்கவில்லை. பயணத்தை முடித்துக் கொண்டு வீடு சென்றாள். உள்ளே நுழையும் போதே, அங்கே முகமறியாத பலர் "சோபா" விலே அமர்ந்தபடி கதைபேசிக்கொண்டு இருந்தனர். அவ்வேளையில் ஏதோ எடுத்து வந்த தாய் அவளைக் கண்டதும் "வா வா இப்பத்தான் வர்றியா? போய் குளித்து விட்டு சாப்பிடு இதோ வருகிறேன்". என்று அவசரமாக சென்றாள். உடனே முகேஷ் எதிரில் பட அவனைப் பிடித்து தன் அறைக்கு அழைத்து சென்று என்ன நடக்கிறது? ஏதாவது விஷேஷமா? யார் அவர்கள்? என்று அடுக்கும் போதே, "ஐசா தெரியாதது போல் கேட்கிறாயே! இன்னும் ஒரு மாதத்தில் திருமணத்தை வைத்துக் கொண்டு ..." என இழுக்கும் போதே திருமணமா? யாருக்கு என்றாள். நம்ம சத்யனுக்குத் தான் என்று திரும்பு முன் மயங்கி கீழே விழப்போனவளை கைகளில் ஏந்தி கட்டிலில் கிடத்திவிட்டு விரைந்து சென்று நீர் எடுத்து வந்து முகத்தில் தெளித்தான். சுய நினைவுக்கு திரும்பியவளை, ஏன் சஞ்சனா? வந்த களைப்பா? சரி சரி போய் சாப்பிடு என்றவன் திரும்பி அறையின் கதவு வரை வந்து விட்டான். "முகேஷ் சத்யன் எங்கே? அவரை நான் பார்க்க வேண்டும் என்றாள்". அவர் இப்போதைக்கு வரமாட்டார். திருமண அழைப்பிதழ் சம்பந்தமாக ஏதோ அலுவலாக மாமனார் வீட்டுக்கு சென்றுள்ளார். என்றதும் மீண்டும் அதிர்ந்தாள். இடிமேல் இடியாய் விழுந்தது அன்று அவளுக்கு என்ன நடக்கிறது இங்கு? அதற்குள் சத்யனுக்கு என்னை வெறுத்துவிட்டதா? இப்படியொரு விடயம் பற்றியே என்னிடம் கூறவில்லையே! என்று எண்ணிக்கொண்டு கட்டிலில் சாயந்தவள் கரகரவென்று கண்ணீர் பொங்கி வழியச் சற்று நேரம் அழுதாள்.

அறையில் சுவர்க்காடிகாரத்தில் குயில் கூவ, அடித்தது மணி பன்னிரண்டு! நெடுநேர நித்திரையின்மையால் சற்று நேரம் குறுக்கும் நெடுக்குமாக நடந்தவள், எப்படியும் நாளை சத்யனிடமே கேட்டுவிட வேண்டியதுதான் என எண்ணினாள் ஏன் கேட்க வேண்டும்? இன்னும் ஒரு மாதத்தில் வேற்றுவளோடு திருமணமாம். கேட்டு என்ன பயன்? இத்தனை நாள் என்னை ஏமாற்றுவதற்காக பொய்யாக பழகியிருக்கிறான். இனி அவன் முகம் பார்ப்பதில்லை என்ற முடிவுடன் ஏதோ நினைவில் படுத்தவள் உறங்கிப் போனாள்.

மறுநாள் முற்றத்து மரநிழலின் கீழே, கையில் காலைப் பத்திரிகையுடன் அமர்ந்திருந்த சத்யனைப் பார்த்தும் பாராதது போலவே கடந்து சென்று விட்டாள். இவர்களை தவிர இரு கண்கள் அதனை நோட்டமிட்டதை இருவரும் அறியவில்லை. சஞ்சனாவின் தாய் சத்யனிடம் கேட்டாள் "ஏன் உங்கள் இருவருக்கிடையில் ஏதேனும் பிரச்சினையா? சஞ்சனா உன்னிடம் கதைக்காமலே சென்று விட்டாளே." அது வேறொன்றுமில்லை. இம்முறை அவளை அழைத்து வர செல்லாததன் தண்டனை தான் என்று பொய்யாக சிரிக்கவே, "இன்னும் சிறுவர்கள் போன்றே இருக்கிறீர்கள். நல்ல பிள்ளைகள் தான்". என்று கூறிச் சென்று விட்டாள். சத்யனின் முகம் பார்க்க விரும்பாத சஞ்சனா அதிகப்படியான நேரத்தினை தன் அறையிலேயே கழித்தாள். இடையிடையே நண்பிகளின் வீடுகளுக்கும் சென்று ஒருவாறாக நாட்களைக் கடத்தினாள்.

திருமணத்தன்று நிச்சயமாக தன்னால் பொறுத்து கொண்டு இருக்கமுடியாது என்றெண்ணியவள், என்ன காரணம் சொல்லி இங்கிருந்து செல்வது? அதற்கு அனுமதிக்கமாட்டார்களே, எப்படியும் போய் விடவேண்டும் என்றே முடிவுசெய்து விட்டாள். தகுந்தாற்போல் இறைவன் அருளால் மறுதினமே பல்கலைக்கழத்தில் இருந்து அடுத்த "செமஸ்டர்" ஆரம்பிப்பதற்கான அழைப்பு வந்திருந்தது. அதனை காரணம் காட்டி சென்று விட்டாள். அவள் அவசரமாக அங்கிருந்து செல்வதற்கான காரணத்தை சத்யனும் உணரவே செய்தான். இருந்தும் என்ன சொல்ல முடியும் அவனால்? அழைத்து சென்று விடுவதற்கும் அனுமதித்தாளில்லை. தோழியொருத்தியும் தன்னுடன் வருவதாகவும் துணை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையில்லை எனவும் கூறிவிட்டாள். அங்கிருந்து சென்றதற்கென்ன அவள் மனது நிம்மதி கொள்ளவில்லை. சத்யனாலும் அவள் தன்னிடம் முகம் கொடுத்து கதையாதது பற்றி பொறுக்கமுடியாமல் தான் இருந்தது. அவள் பிஞ்சு மனதை நன்கு நோகடித்து விட்டோமே என்ற குற்ற உணர்வு தான்! சஞ்சனா பற்றிய சிந்தனையில் இருக்கும் போதே தொலைபேசி அழைக்க திடுக்கிட்டவனாய் எடுத்து பார்த்தான். சந்திரா தான் அவனை அழைத்திருந்தாள். இவள் வேறு நேரங்காலம் தெரியாமல் என அலுத்துக் கொண்டே "ஹலோ நான் கொஞ்சம் வேலையாய் இருக்கன். நாளை உங்களுடன் கதைக்கலாம். குறை நினைக்காதீர்கள் ப்ளீஸ்" என கூறி வைத்துவிட்ட உடனே, தொலைபேசி மூலம் சஞ்சனாவை அழைக்க அது செயலிழந்து காணப்பட்டது.

அன்றைய தினம் சத்யன், சந்திரா இருவருக்கும் திருமணம். எனினும் சஞ்சனா, சத்யன் தவிர அனைத்து உள்ளங்களும் ஆனந்தப்பட்டன. சுற்றம் கூடி வாழ்த்த, அனைவரின் ஆசிர்வாதத்துடனும், ஆனந்தத்துடனும் திருமணம் இனிதே நிறைவடைந்தது. எந்தவித குறையுமின்றி சந்தோஷம் நிறைந்ததாகவே அமைந்திருந்தது. சத்யன், சந்திராவின் வாழ்க்கை. அதன் பின் சஞ்சனா எப்போது வந்தாலும் இதுவரை அவன் முகம் பாராதவளாகவே இருக்கிறாள். இருவருக்கும், இல்லை இல்லை சந்திராவையும் சேர்த்து மூவருக்கும் அதுவே நன்மையாய் அமைந்தது. திடீரென "அம்மா இந்த சீட்டில் யாரும் இருக்கின்றனரா?" என ஒரு குரல் அழைக்க திரும்பிப் பார்த்தவள். இல்லை எனக்கூறிவிட்டு தன் சுய நினைவிற்குத் திரும்பினாள். அவ்வேளை தான், தான் அடுத்த நிலையத்தில் இறங்கவேண்டுமென்பதை உணர்ந்தாள். எல்லாம் சற்றுமுன் நடந்து முடிந்ததைப் போல் இருந்தது அவளுக்கு! ஒரு வருடம் பூர்த்தியாகிவிட்டது.

வீட்டிற்கு விரைந்தவள் அன்று போன்றே இன்றும் ஓர் அதிர்ச்சி காத்திருப்பதை அறியாதவளாய் வீட்டினுள் நுழையும் போதே, அவளின் தாய் தான்... விஷயம் அறிந்து அவளே அதிர்ந்து விட்டாள். காரணம் இரு வாரங்களுக்கு முன் ஏதோ கடைக்கு சென்று வரும் வழியில் விபத்தொன்று நேர்ந்துவிட்டதாம். உயிரை மட்டுமே காப்பாற்ற முடிந்ததென வைத்தியரனைவரும் கைவிரித்துவிடவே, இன்று வரை கோமா நிலையை தாண்டவில்லையாம் சந்திரா. தன் வாழ்க்கையைப் பறித்துக் கொண்டவளாயினும் அவளும் ஒரு பெண்ணாயிற்றே. அதுவரை அவள் முகமே பார்த்திராத சஞ்சனா வந்ததும் வராததுமாய் ஓடிச்சென்று அவளைப பார்த்துவிட்டு வந்த அழுகையை அடக்க முயன்று தோற்றவளாய் வாய்விட்டு அழுதே விட்டாள். அப்போது தான் சந்திராவை நேரில் பார்த்த அவள், வடிவானவள்தாள் அதுவும் அவனுக்கேற்றவள்தான். இருந்தும் இப்படியாகிவிட்டதே! என்றெண்ணி மனதிற்குள் கடவுளையும் நொந்துகொள்ளத்தான் செய்தாள். அவளுக்கு எளிதில் குணமடைய வேண்டுமெனவும் தினமும் பிரார்த்தித்துக் கொண்டவள், இடையிடையே சென்று சிறு பணிவிடைகளையும் அவளுக்காக செய்து தந்தாள். எனினும் அப்போதும் கூட சத்யனின் முகம் பாராமலேயே இருந்து விட்டாள். இரு மாதங்களின் பின் சஞ்சனாவிற்கு வெளிநாடு சென்று தொழில் புரிய வாய்ப்பொன்றும் கிடைக்கவே, அதனை எதிர்பார்த்திருந்தவளாய் மூன்றே வாரங்களில் சிறந்ததோர் எதிர்காலத்தினை நோக்கி ஆனாலும் சிறகொடிந்த பறவையாய் பறந்து விட்டாள். காதலில் தோற்றுப் போனாலும் தன் இலட்சியத்தை வென்றுவிட்ட மகிழ்வுடன் எதிர்காலத்தை நோக்கி பயணமாகிறாள், சஞ்சனா.... ஆனால் இதுவரை அவர்களின் காதல் விவகாரம் பற்றி இருவர் தவிர வேறொருவரும் அறிந்திருக்க முடியாததாகவே போய்விட்டது.

**ஸ்ரீதர்ஷினி தில்லைவாசகம்**
2ம் வருடம் - கணனி பொறியியல் பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

# N.S.R

கடைச்சல் தொழிலகம்

## தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

பருத்தித்துறை வீதி,
நெல்லியடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்தும் உனக்காக

உழைப்பே சிறந்த செல்வம்

உண்மை என்றும் வெல்லும்

கண்ணியமே சிறந்தது

அனுபவம் அறிவூட்டும்

மனிதன் வயிற்று அடிமை

செல்லாத பணம் செலவழியாது

சோம்பேறி அரைப்பிணத்திற்கு சமம்

எவரிடமும் ஏதும் கேட்பது பிச்சை

பெருந்தன்மையை காட்ட பணம் தேவையில்லை

ஒற்றுமை இல்லாத வீடு என்றும் நிலைக்காது

அதிகப்படியான வேலை ஆரோக்கியத்தை கெடுக்கும்

உழைக்காமல் உண்பவன் திருடி உண்பவனாவான்

கடன் கொடுக்கவோ வாங்கவோ கூடாது

கோபம் கொள்வது பலவீனத்துக்கு அடையாளம்

நல்லவனுக்கு உலகம் முழுவதும் நல்லதாகக் காணும்

பேராசைக்காரன் கடைசிக் காலத்திலும் பணத்தை நாடுவான்

நல்ல மனிதர்கள் அல்ப ஆயுளில் போய்விடுவார்கள்

சந்தர்ப்ப வாதிகள் எவருக்கும் கும்பிடு போட தயங்கமாட்டார்கள்

உலகில் எல்லோரும் தம் பழி தீர்க்க விரும்புவார்கள்

ஒருவரை அவர் எதிரில் கூறும் வார்த்தை முகஸ்துதியாகும்

மிக நெருக்கமான பழக்கம் வெறுப்பை உண்டாக்கும்

செல்வத்தை தேடி நட்பு வரும் அதை சோதிக்க ஏழ்மை வரும்

சண்டையிலும் காதலிலும் நியாய அநியாயம் கிடையாது

ஆபத்தில் உதவுபவன் தான் உண்மையான நண்பன்

அழகான வேலை செய்பவனே அழகன்

மௌனம் பாதி சம்மதத்திற்கு அறிகுறி

முடிவு நல்லதானால் எல்லாம் நல்லதே

**த. நிதாஜினி**

2ம் வருட குடிசார் பொறியியல் பீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

# NEHRU PHOTO & VIDEO

Videography & Editing, Photography & Album Makers CD, VCD & VHS Writing


☆

☆

☆

☆

☆



No.63, Manning Place,
Colombo - 06.
Tel : 0779-591301

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயிப்பது எப்போது !!

இப்படித்தான் வாழவேண்டுமென .... வாழ் ....
அதுதான் வாழ்வென்றனர் பெரியோர்!
எனக்கெல்லாம் இப்படியிருக்கனும் ....
அதுதான் என் வாழ்வென்றேன் நான்!
காட்டாற்றாய் பாயும் ....
வாழ்க்கையெனும் போராட்டத்தில் ....
போராளியானேன் ....
இலக்குகளை இனங்கண்டேன் ....
முட்டிமோதி கைப்பற்றத் துடித்தேன்.
தென்றலென நினைக்க புயல் வந்தது ....
வசந்தமென நினைக்க வரட்சி வந்தது ....
கைவிடவில்லை .... இலக்குகளை ....
சுற்றி வளைக்கப்பட்டேன் ....
போராட்டங்களாலும் .... வலிகளாலும் ....
பெறுபேறுகளை காணமுடியவில்லை ....
போர்க்களத்தில் நானும் தனியாய் .... !
வாழ்க்கையே போராட்டமாய் ....
மெல்லவும் முடியாமல் ....
துப்பவும் முடியாமல் ....
போராடும் போராளி நான் !

**இ.ரேணுகா.**
2ம் வருட பொறியியல் பீட மாணவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் சமயம்

பிரபஞ்சம் உருவாகிய போது உயிரினங்களும் தோன்றியது பிரபஞ்சம் அப்படியே இருக்க உயிரினங்களின் பரிணாமம் மட்டும் வளர்ச்சியடைந்தது. இதில் ஒரேயொரு விலங்கினம் மட்டும் தன் வாழ்க்கை வட்டத்தை வித்தியாசமாக மாற்றியமைத்துக் கொண்டது, அவ்வினம் முற்று முழுதாக ஏனைய விலங்குகளில் வாழ்க்கையமைப்பை விட வித்தியாசப்பட்டதுடன் இப்பிரபஞ்சத்தை ஆட்டிவைக்கவும் ஆரம்பித்தது.

எவ்வாறு இவ்வினம் மட்டும் இவ்வாறு வளர்ச்சியடைந்தது என உய்த்தறிந்தபோது அதன் பெயர் பகுத்தறிவு என விளக்கபட்டது அவ்வினத்திற்கு மனிதன் என பெயரிடப்பட்டது.

மனிதன் என்றால் அர்த்தம் என்ன ?

மனம் ஆள்பவன் ஸ்ரீமனிதன் அதாவது தன் மனதை தனக்கு விருப்பபடி ஆட்சி செய்பவன் மனிதன் எனப்பட்டான். ஆகவே மனம் தன் விருப்பப்படி ஆட்சி செய்யப்படும் போது அவ்வுயிரினம் மிருகமாகிறது.

பகுத்தறிவை வைத்து மனம் தன்னை ஆட்சி செய்த மனிதன் தன் வாழ்க்கை நடைமுறையை ஏனைய விலங்குகளிலிருந்து அபிவிருத்தியாக்கினாலும் மிருகங்களினதும் மனிதனதும் வாழ்க்கை வட்டம் மட்டும் ஒரே விதமாகவே காணப்பட்டது.

ஏனென்றால் மிருகம் தன் வாழ்கையில் அடிப்படையாக உண்டு உறங்கி தன் இனத்தை விருத்தி செய்து மரணிக்கிறது. மனிதனும் உண்டு உறங்கி தன் இனத்தை விருத்தி செய்து மரணிக்கிறான். அப்படியென்றால் மனிதனுக்கும் விலங்கிற்கும் வித்தியாசம் எங்கே ?

மனிதனின் பகுத்தறிவால் என்ன பயன் ?

மனிதன் தன் தேவைகளை இலகுவாக்குவதற்கும் ஆடம்பரமாக வாழ்வதற்கும் விஞ்ஞானம் எனும் போர்வையிற்குள் மூழ்கிப்போனான் அதன் விளைவு நாகரீகமாக இருந்தாலும் அது அழிவுகளின் அத்திவாரத்திற்கும் வித்திட்டது. இதுதான் பகுத்தறிவால் கிடைத்த பயன் என்றால் மனிதன் தன் வாழ்கையை எப்படி அர்த்தப்படவைப்பது ? அவன் எவ்வாறு விலங்குகளின் வாழ்க்கை வட்டத்திலிருந்து வித்தியாசப்படவேண்டும் ? இந்தக்கேள்விகளின் விடைதான் சமயம்.

மனிதன் மனிதனாக வாழ்வதற்கு அவன் தன் வாழ்க்கையை ஒழுங்குபடுத்தல் வேண்டும் அதாவது அவன் தன் வாழ்க்கையை சமைத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். இவ்வாறு மனிதனின் வாழ்கையை சமைப்பதற்காக தோன்றியதுதான் சமையம் என்பதாகும்

ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு வழிமுறைகளை கையாண்டாலும் அவை மனிதனின் மகத்தான மனிதம் பேணுவதற்கே தோன்றின உதாரணமாக இந்து தர்மத்தில் உபநிடதங்களில் மனிதனின் ஒவ்வொரு நிலைகளும் என்ன ? அவை எவ்வாறான அம்சங்களை கொண்டிருக்க வேண்டும் என்று அழகாக கூறுகிறது. அவை குழந்தைப்பருவம், மாணவப்பருவம் இல்லறநிலை, துறவுநிலை, முற்றும் துறந்தநிலை என வகுக்கப்பட்டுள்ளது. இவ்வொழுங்கு படுத்தலில் ஒவ்வொரு நிலையிலும் மனிதன் காலை எழுந்ததிலிருந்து இரவு உறங்கும் வரை என்ன என்ன செய்ய வேண்டும் என்பதை தெளிவாகக்கூறப்பட்டுள்ளது

மனிதன் இவ்வாறு சமைக்கப்பட்டு அவன் மனம்தன்னை ஆட்சிசெய்து மனிதனாக ஏன் வாழவேண்டும்? எப்படியும் வாழலாமே? என்ற கேள்வியும் தோன்றாமலில்லை. இப்பிரபஞ்சம் பஞ்சபூதங்களால் ஆட்சிசெய்யப்பட்டு வருகிறது. என்றாவது இவைகளின் நிகழ்வுகளில் தடை ஏற்பட்டுள்ளதா அல்லது மாற்றம் ஏற்பட்டுள்ளதா? இரவின் பின் பகலின்றியுள்ளதா பிறப்பின் பின் மரணம் இன்றி உள்ளதா? இவை அனைத்தும் சீராக செவ்வனே எவ்வாறு நடைபெறுகிறது? இதை சீராக செயற்படுத்துவது யார்? என்ற கேள்வியின் விடைதான் அது ஒரு சக்தியென்றும் அதன் வடிவம் இறைவன் எனும் உண்மையும் மனிதனுக்கு புரிந்தது.

இந்த சக்தி எங்கே உள்ளது? அதாவது இறைவன் எங்கே இருக்கின்றான் அவனை எவ்வாறு அடையாளம் காண்கிறோம் என்பதற்கான வழிமுறைகளையும் அதற்கான அவசியத்தையும் வேதங்கள் சிறப்பாக கூறுகிறன. ஆக சமையத்தால் மனிதன் சமைக்கபட்டு வேதவிதிமுறைகளுக்கிணங்க அந்த பரம்பொருளை அடைந்து பேரின்பமடைவதே மனிதனின் இப்பிறவியை அர்த்தப்பட செய்வதாகும் அப்போதுதான் மிருகங்களின் வாழ்கை வட்டத்திலிருந்து மனிதன் வித்தியாசப்படலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

# V.T.C
# TRACTOR SPARE PARTS

## தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

**பருத்தித்துறை வீதி,**
**நெல்லியடி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவ மணிகள்

- தக்க நேரம் பார், தீமையைக் குறித்து விழிப்பாயிரு
- உன்னைப் பற்றியே நாணம் அடையாதே
- ஒரு வகை நாணம் பாவத்திற்கு இட்டுச் செல்லும்
- பாகுபாடு காட்டி உனக்கே கேடு வருவித்து கொள்ளாதே
- பணிவின் பெயரால் வீழ்ச்சி அடையாதே
- பேசவேண்டிய நேரத்தில் பேசாமல் இருந்து விடாதே
- ஞானம் பேச்சில் புலப்படும் நற்பயிற்சி வாய்மொழியால் வெளிப்படும்
- உண்மைக்கு மாறாகக பேசாதே உன் அறியாமைக்காக நாணம் கொள்.
- பெறுவதற்கு மட்டும் கைகளை விரித்து வைத்திராதே
- கொடுக்கும் நேரத்திலோ உன் கைகளை மூடிக்கொள்ளாதே.

**இ. கணபாலன்**
1ம் வருடம்
இயந்திரவியல் பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*



## NEW LUXUMI AGENCY

General Merchants &
Commission Agents



53 A, 4th Cross Street,
Colombo 11.
Phone : 2438465, 4863453

*With Best Compliments*

## RAMSETHU & CO.

Importers, General Merchants,
Commission Agents in Local Produce



No. 65, 4th Cross Street,
Colombo - 11.
Sri Lanka

Tel : 2323686, 2380374

*With Best Compliments*

## MALAVANS

Importers, Distributors &
Wholesale Dealers



No. 214, 4th Cross Street,
Colombo - 11.

Tel: 5863434, 2327951

*With Best Compliments*

## GNANAM IMPORTS (PVT) LTD.

# 168, 4th Cross Street,
Colombo 11.

Tel: 2325838, 5362231
Fax: 94 11 2393339



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாராசன் குருபார்ப்பானா?

காலம் மாறுமா? பெண்ணுக்கு !
கல்யாணம் நடக்குமா ! பெத்தவள் மனதில் ஏக்கம் !!
அவ்வப்போது ! அண்டை வீட்டு பெண்டிர்கள் !
அடிக்கும் அரட்டைகள் !
ஒருசில பெண்ணுக்கு ஏற்படும் !
தற்கொலை முயற்சி !!

செவ்வாய் தோசம் ! காளா ஹஸ்த்தி சென்று !
சாந்தி செய்ய வேண்டும் !
மனதில் உறுத்தல் !! மாப்பிள்ளைகள் மாதத்தில் !
மூன்று முறை வீட்டுப் படியேறி ! கை நனைத்துச் செல்வார் !
போய் கடிதம் போடுறோம் என்பார் !!

சீவி முடிச்சி சிங்காரிச்சி ! பருவ மேனியை அழகு போட்டியாக்கி !
வந்தவர் ஓரக்கண்களின் நெருடல் பட்டு !
வெந்த மேனியாக அவள் !
நாணத்தோடு வெட்கித் தலைகுனிந்து !
நிற்கும் அந்தப் பெண்ணை !!

ஏற்றுக்கொள்ள வரும் எவருக்கும் !
மனசில்லை அப்படியே மனசு இருந்தாலும் !
எத்தனை பவுன் பெண்ணுக்கு !
ஐம்பது நூறு போடுவீர்களா !
மாப்பிள்ளைக்கு சுசிகி ஹோண்டா!
உண்டா ! சந்தைக் கடையில் மாட்டை !
விலைபேசி முடிக்கத் துடிக்கும் ! வெட்டிக் கூட்டம் ஒன்று !!

போதுமடா சாமி ! இந்த பெண் பிறவி !!
காலமெல்லாம் கண்ணி பெண்ணா? வாழ்ந்திடுகிறேன் !
அவளின் ! மனதில் குமுறும் குமுறல்
அவள் தோழிகள் பலர் ! கணவனோடு கைக் கோர்த்து!
உலாவரும் காட்சிகள் !!

இதயத்தை இரும்பாக்கி ! கண்களில் கண்ணீர் குளமாகும் !
கெட்டி முழங்கிடும் ! நாள் என்றோ, கன்னிப்பருவம் !
விடுதலைப் பெறுமா? மகாராசன் குருபார்ப்பானா ?

S. ஹரிஸ்மர்
3ம் வருடம், பொறியியல்பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் சட்டங்கள்

சட்டம் என்பது பண்பாட்டுடைய சமூக வாழ்க்கைக்கும் மனிதர்களிடையே எவ்வித பிணக்குகளும் ஏற்படாது இருப்பதற்கும் பிணக்குகள் எற்பட்டால் அவற்றைத் தீர்ப்பதற்கும் உதவும் ஒரு சட்டவாக்கமாகும். சட்டம் ஒரு விசேடமான ஒன்றாக கருதப்படுகின்றது. ஏனென்றால் சட்டம் மனிதனால் ஆக்கப்படுவதுடன் அவ்வாறு மனிதனால் ஆக்கப்பட்ட சட்டமானது ஆக்கப்பட்டவரையும் எதிர்க்கும் சக்தி கொண்டதாக விளங்குகின்றது.

அனைவரும் சட்டங்கள் பற்றிய அறிவைப் பெற்றிருப்பது அவசியமாகும். காரணம் தற்கால சிக்கலான போட்டி மனப்பான்மை கொண்ட சமூகத்தில் தமது எதிர்கால முன்னேற்றத்தை சரியான முறையில் மேற்கொள்வதற்கு சட்டம் பற்றிய முழுமையான அறிவு அவசியமானதாகக் காணப்படுகின்றது. சட்டத்தின் வரலாற்றினை நோக்கும் போது 02 முக்கிய அம்சங்களை இனங்காணக்கூடியதாகவுள்ளது. அவையானவை

பண்பாடு ⇄ சமயம்

ஆரம்பக்காலங்களில் சமூகத்தில் சட்டம் தனியானதாக இல்லாதிருந்ததுடன் அச்சமூகமானது சமய பாண்பாட்டு சட்டங்களைக் கொண்டு ஆளப்பட்டு வந்தது. இந்நிலை காலப்போக்கில் சமய பாண்பாட்டு கருத்துக்கள் சமூகத்தில் வேரூண்டியதன் காரணமாக சட்டம் தனியான ஒரு அம்சமாக உருவாகியது.

இலங்கையின் சட்டவாக்கமானது ஆங்கில சட்டத்தாலும் ரோம-டச்சு சட்டத்தாலும் தேசிய சட்டத்தாலும் வளர்ச்சியடைந்து காணப்படுகின்றது. அதாவது போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் படையெடுப்பின் மத்தியில் ஒரு சில மாற்றங்களை எதிர் கொண்ட சட்டம் இவ்வகையானதாகும்.

இலங்கையில் பிரதான சட்டமாக அரசியலமைப்புச் சட்டம் கருதப்படுகின்றது. அரசியலமைப்புச் சட்டத்தில் நிறைவேற்று அதிகாரம் அதனை அமுல்ப்படுத்தும் நீதித்துறை, அதிகாரம், அடிப்படை உரிமைகள், வாக்குரிமை, அதிகாரப்பகிர்வு போன்றவை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. இலங்கையில் அரசியல் சட்டத்தினை தற்போது மேலதிகமாக இரு பிரிவுகளாக நோக்கலாம்.

சட்டம்

குற்றவியல்

1. தண்டனைச் சட்டக்கோவை
2. குற்றவியல் சட்டக்கோவை
3. குற்றவியல் சட்டத்திற்கு ஏற்புடைய சட்டங்கள்

சிவில் சட்டம்


1. சொத்துச்சட்டம்
2. குடும்பச்சட்டம்
3. தீங்கியல் சட்டம்
4. ஒப்பந்தச்சட்டம்
5. வர்த்தகச் சட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைமைகளும் நீதித்துறைகளும் ஆங்கில ஆட்சியின் போது மிகவும் ஒழுங்கான நிலையில் காணப்பட்டது. இன்று இலங்கையில் நீதித்துறையும் குற்றவியல் சட்டமும் முழுமையாக ஆங்கில சித்தாந்தத்தினை அடிப்படையாகக்கொண்டு அமைந்துள்ளன. சிவில் சட்டங்களில் சில பிரிவுகள் ஆங்கில ஆங்கில சித்தாந்தத்தினை அடிப்படையாக கொண்டு இருப்பதுடன் கூடுதலானவை ரோமடச்சு சட்டத்தினாலும் தேசிய சட்டத்தினாலும் ஆளப்படுகின்றன.

இலங்கைளில் நீதியை நிலைநாட்டும் நீதிமன்றங்கள் அரசர்கள் காலம் தொட்டு இருந்து வந்ததாக வரலாறு கூறுகின்றது. எப்படியாயினும் தற்போதைய இலங்கையின் நீதிமன்றத் துறை பின்வருமாறு வகுக்கப்பட்டுள்ளன.




மேலும் இலங்கையில் சிறுவர் தொடர்பான முக்கிய சட்டங்கள் சிலவும் குறிப்பிடத்தக்கது. 1995ம் ஆண்டு 22ம் இலக்க தண்டனைச்சட்டத்தின் படி பெண்களினதும் சிறுவர்களினதும் பாதுகாப்பின் காரணமாக பின்வரும் விசேட சட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- 16 வயதிற்கு குறைவான சிறுவர்களுக்கு ஏதிராக செய்யப்படும் குற்றத்திற்கு தண்டனை அதிகரிக்கப்பட்டுள்ளது.
- குழுவாக கற்பழிப்பு, பாலியல் ரீதியான சூறையாடுதல் என்பவற்றிற்காக விதிக்கப்படும் தண்டனைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.
- 1998ம் ஆண்டு 50ம் இலக்கம் கொண்ட சிறுவர் பாதுகாப்பு அதிகாரச் சட்டமானது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரச்சபையை ஸ்தாபித்து அதன் மூலம் சிறுவர் துஷ்பிரயோகத்தைத்தடுத்தல், துர்நடத்தை, சிறுவர்களை பாதுகாத்தல் மற்றும் இணைப்புக்களையும் முகாமைத்துவத்தையும் ஏற்படுத்துவதாகவும் காணப்படுகின்றது.

அனைவரும் சட்டத்தை பாதுகாப்பதோடு அதனைப் பற்றிய அறிவினையும் கொண்டவர்களாக காணப்படுவதும் அவசியமாகும்.

M.Z.M. **சப்ரீன்**
2ம் வருடம், பொறியியல்பீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

# YASO MOTORS

**HEAD OFFICE**

No.50, K.Cyril C. Perera Mawatha,
Colombo 13, Sri Lanka.
Tel : 011-2347846
Fax : 011-4610448
Hot Line : 0777-238373, 0773-778833

**SITE OFFICE**

No.557, Havelock Road,
Colombo 06, Sri Lanka.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்துள்ளதா? மறைக்கப்பட்டுள்ளதா?

நாடுகள் பல சுதந்திரம் பெற்றாலும்
நங்கைகள் இன்னும் அடிமைகள் தான்
உன்திறமை உனக்குள்ளே
ஒழிந்திருப்பதும் ஏன் பெண்ணே?
வீட்டை ஆண்ட பெண்கள் இன்று
நாட்டை இங்கே ஆண்டாலும்
அடிமையெனும் சங்கிலியை சிலர்
அவிழ்க்காமல் இருப்பதும் ஏனோ?

சிறகொடிந்த பறவைகள் தான் பறக்காது பெண்ணே?
சிறகிருந்தும் பறக்காமல் இருப்பதேன் கண்ணே
வேர்கள் மறைந்திருந்தாலும் மரத்திற்கு உறுதி
மங்கை நீ மறைந்திருந்தால் யாருக்கு உறுதி
இரவினில் அழகு இயற்கைக்கு அழகு
நீ சேர்க்கும் பெருமைகள் இவ்வுலகிற்கு அழகு
சமஉரிமை இதுதானென பறைசாற்றி நிற்பாயோ
சாபம் என தலைகுனிந்து செல்வாயோ?

பாரதி கண்ட புதுமைப் பெண்கள்
பலர் இங்கே தோன்றினாலும்
பள்ளிக்குச் செல்லாமல்
பாடுபடும் சிறுமிகள் பலர்
சிப்பிக்குள் முத்துண்டு கல்லுக்குள் சிலையுண்டு
அதுபோல், பெண்ணுக்குள் ஞானமுண்டு
ஞானமெனும் விதைவிதைத்து புதுமையெனும் நீர் ஊற்றி
பெண்ணின் பெருமைகளைக் கிளைபோல்ப் பரப்பிடுவோம்.

**ஸ்ரீ வித்யா பாலசுப்பிரமணியம்**
1ம் வருடம், பொறியியல் பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

# Sharmijan Graphics & Com

Type Setting, Scanning, Photo Graphics, Digital Print, CD Writing, Card designing Computer repairing, Phone repairing & Other Printing Works.

Mr. Shanthakumar
No.8/7, Rosita Super Market Complex,
Kotagala.

Hot line
0775-717713
071-4620702
051-2224260
E-mail : ww.rkss20yahoo.com

*With Best Compliments*

# THE SILVER RAIN

Quality never goes out of style

No.15P, Kotahena Street,
Colombo 13.

*With Best Compliments*

# M.K.T. DHARSHANI FARM

Vegetable & Flower available here

Mr. K.T. Thillaiwasagan
Drayton K.O, Kotagala
Tel : 051-3509473



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்.

"எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்

உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு"

எனும் திருவள்ளுவர் வாக்கிற்கு

நாமும் இணங்குகிறோம்

மருதம் என்னும் இவ் அழகிய மலரை

பெற்றெடுக்க பல சிரமங்களுக்கு மத்தியில்

எமக்கு கரம் கொடுத்த அனைத்து

நல் உள்ளங்களுக்கும் எங்கள்


உளம் நிறைந்த நன்றிகள்.

**தைத்திருநாள் விழா ஒருங்கமைப்புக் குழு**
**இலங்கை திறந்த பல்கலைக்கழகம் 2010**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Unchallenged Pioneer in ICT Education in Sri Lanka

# Fast Track Your Career

An Internationally Recognized Degree from a Prestigious University in the UK, In Just TWO (2) Years




**Software Engineering | Networking | Multimedia | Web Development**
**Business Management | Hospitality Management**

**First Year(Year 1) in Sri Lanka &Final Year (Year 2) in A University/ College in the UK**

IDM

**Nation's ICT Academy**
**Affiliated University College**
**City Campus #3**

No. 16, 42nd Lane, Colombo 06, Sri Lanka
Tel : +94 11 2 361 801 Fax : +94 11 2 361 807
www.idmcc3.lk info@idmcc3.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org